பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 புரட்டாதி 29 வெள்ளிக்கிழமை (15-10-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:325

## மாற்று யோசனைகள் தயார் என்கின்றது அரசு

### பதிலுக்குக் காத்திருப்பதாகத் தகவல்

கொழு[illegible],ஒக்ரோபர்15

**அரசின் மாற்று யோசனைகள் தயாராகிவிட்டன. வி[illegible]ரவில் அது புலிகளிடம் சமர்ப்பிக்கப்படும். அவர்களிடமிருந்து சமிக்ஞை கிடைத்ததும் பேச்சு மீண்டும் ஆரம்பமாகும்.**

**- இவ்வாறு கூறுகின்றார் அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள ச[illegible]ரவீர.**

அவர் மாற்று யோசனைகள் என்று கூறியது புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான அரசின் மாற்றுத் திட்டத்தையே. எனினும், தான் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாடு முழுவதும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை என்ற வார்த்தையை அவர் பயன்படுத்தவில்லை.

நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு

(2ஆம் பக்கம் பார்க்க)

## ஆனால் பரிசீலிக்க புலிகள் தயாரில்லை!

### பதிலே தேவையில்லை எனக் கருத்து

கொழும்பு,ஒக்ரோபர்15

**வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக விவகாரம் தொடர்பாக அரசின் மாற்றுயோசனைகள் தயார் என்றாலும், அதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதற்கு இணங்கப் புலிகள் தயாரில்லை எனப் புலிகளின் உயர்வட்டாரங்கள் தெரிவித்தன.**

**அதுதொடர்பாகப் புலிகளின் நிலைப்பாடு வெளிப்படையானது என்பதால், அதற்கான பதிலைக் கூறவேண்டிய தேவையே எழாது என்றும் அவ்வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.**

அரசு மாற்று யோசனைகளைத் தயாரித்து வருவதாகக் கூறப்படும் செய்திகள் குறித்து புலிகளின் உயர் வட்டாரங்களிடம் கேட்டபோது அவ்வட்டாரங்கள் தெரிவித்த கருத்துகள் வருமாறு:-

அப்படி யோசனைகள் தயாரிக்கப்படுவதாக எமக்கு உத்தியோகபூர்வ தகவல் ஏதும் தெரி

(2ஆம் பக்கம் பார்க்க)

### இரு ஊர்காவலரின் விடுதலைக்கு நிபந்தனையாகக் குறிப்பிடப்பட்ட

## 10 புலிப் போராளிகளும் பிணையில் விடுவிப்பு!

திருகோணமலை,ஒக்.15

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் 10பேர் நேற்று நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமைய மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றம் அவர்களுக்குப் பிணை வழங்கியது.

இவர்களுக்குப் பிணை வழங்குவதற்கான அனுமதியை மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமையும் திங்கட்கிழமையும் வழங்கியிருந்தது. எனினும், அந்த உத்தரவு மட்டக்களப்பு நீதிமன்றுக்குக் கிடைப்பதில் நிலவிய தாமதத்தால் போராளிகளைப் பிணையில் விடுவிப்பதும் தாமதமானது.

கடந்த வருடம் ஜூலை மாதம் 8ஆம் திகதி வாழைச்சேனையில் கைக்குண்டுடன் கைது செய்யப்பட்டவர்கள் எனக்கூறப்பட்ட பயஸ் இராஜேந்திரா (குலதீபராஜ்), வடிவேல் சந்திரகுமார் (பிரசாத்) ஆகியோரும் -

அதேமாதம் 14 ஆம் திகதி கல்லடிப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## காய்ச்சலால் நேற்று மட்டும் ஐம்பது சிறுவர்கள் ஆஸ்பத்திரியில்!


யாழ்ப்பாணம்,ஒக்.1[illegible]

ஒருவித காய்ச்சல் காரணமாக நேற்று மட்டும் சுமார் ஐம்பது சிறுவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

இவர்களுக்கு ஒருவித காய்ச்சல், தலையிடி, வாந்தி போன்ற நோய்கள் காணப்படுவதாகக் கூறப்பட்டது.

அண்மையில் குடாநாட்டில் பெய்த மழை மற்றும் காலநிலை மாற்றம் என்பனவற்றின் காரணமாக சிறுவர்களுக்கு ஒருவித காய்ச்சல் பீடித்திருக்கலாம் என வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (எ-7)

## பாலசிங்கம் வரைந்த 'போரும் சமாதானமும்'




### ஐந்நூறு பக்க நூல் வெளியாகிறது

லண்டன்,ஒக்.15

தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் ஆங்கிலத்தில் ஒரு புதிய அரசியல் வரலாற்று ஆய்வு நூலை எழுதியிருக்கின்றார். இந்நூல் இவ்வாரம் லண்டனில் வெளியிடப்படுகின்றது.

'போரும் சமாதானமும்' (WAR AND PEACE) என்ற தலைப்பில் [illegible] பக்கங்களைக் கொண்ட இந்த நீண்ட ஆய்வுநூல் தமிழீழ மக்களின் போராட்ட வரலாற்றினை ஆழமாகத் தரிசிக்கின்றது.

தமிழீழ மக்களின் தேசிய சுதந்திரப் போராட்டத்தின் படிநிலை வளர்ச்சியில் நிகழ்ந்த முக்கிய வரலாற்று நிகழ்வுகளைக் காலவரிசையில பதிவுசெய்து விளக்கம் கொடுக்கிறது அது.

(2ஆம் பக்கம் பார்க்க)

## பாலசிங்கம்—சொல்ஹெய்ம் லண்டனில் திங்கள் சந்திப்பு

கொழும்பு,ஒக்.15

நோர்வே அனுசரணைக் குழுவின் பிரதிநிதியான எரிக் சொல்ஹெய்ம் 18ஆம் திகதி திங்கட்கிழமையன்று லண்டனில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசவிருக்கின்றார் எனத் தெரிகின்றது.

கடந்தவாரத்துக்கு முந்திய வார இறுதியில் ஜெனீவாவில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தையும் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் புலிகளின் அரசமைப்பு விவகாரக் குழுவின் ஏனைய உறுப்பினர்களையும் சந்தித்துப்பேசிய எரிக் சொல்ஹெய்ம் அதனை முடித்துக்கொண்டு அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் சென்றிருந்தார் என்பது தெரிந்ததே.

அந்த விஜயத்தை முடித்துக்கொண்டு தற்போது நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவுக்கு எரிக் சொல்ஹெய்ம் திரும்பியுள்ளார்.

இதேசமயம், அனுசரணைக் குழுவில் முக்கிய பங்காற்றும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் இந்தியாவில் நான்குநாள் விஜயத்தை முடித்துக்கொண்டு ஒஸ்லோ திரும்புகின்றார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் ஒரு பொலீஸார் அடையாளம் காணப்பட்டார்

யாழ்ப்பாணம்,ஒக்.15

யாழ். பொலீஸ் நிலையத்தில் வைத்து மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக மேலும் ஒரு பொலீஸ் உத்தியோகத்தர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடந்த 27ஆம் திகதி யாழ். பொலீஸ் நிலையத்திற்குள் வைத்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான அடையாள அணிவகுப்பு நேற்றுமுன்தினமும், நேற்றும் யாழ். நீதிமன்றில் நடைபெற்றன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் 46 பொலீஸ் உத்தியோகத்தர்களை நிறுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டபோதும் பொலீஸ் சார்ஜனடான அசைல மற்றும் பொலீஸ் உத்தியோகத்தரான ஆரியசிங்க ஆகியோர் சுகவீனம் காரணமாக மன்றில் ஆஜராகவில்லை.

(16ஆம் பக்கம் பார்க்க)

## சூசைக்கு இயக்கத்தில் பிரச்சினையா? அது முழுப்பொய் என்கின்றார் பாலா

லண்டன்,ஒக்.15

கடற்புலிகளின் தளபதி கேணல் சூசைக்கும் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் இடையில் கருத்து வேறுபாடு, முரண்பாடு என்றெல்லாம் தென்னிலங்கை ஊடகங்களில் வெளியான செய்திகள் முற்றிலும் தவறானவை; அடிப்படை ஏதும் [illegible]ற்றவை- என்று புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

மேற்படி ஊடகங்களில் வெளியான செய்தி குறித்து அவரிடம் நேற்றுமுன்னிரவு கேட்டபோது அவர் கூறியதாவது-

சற்றுமுன்னர் கூட தம்பி சூசையுடன் தொடர்பு கொண்டு உரையாடினேன். அப்படியேதும் குழப்பமோ, பிரச்சினைகளோ இல்லை - என்றார்.

இந்தியப் படையுடன் வல்லிக்காட்டின் நித்தியகுளம் பகுதியில் இடம்பெற்ற சண்டையில் தற்போது காவல்துறைப் பொறுப்பாளராக இருக்கும் நடேசன் மற்றும் சூசை போன்றோர் காயமடைந்தனர் என்பது உங்களுக்குத் தெரியும் - அச்சமயம் சூசையின் தோள்பட்டையில்ரவை

(16ஆம் பக்கம் பார்க்க)

NSB சேமிப்பு மாதம்

சேமிப்பு நிறையும் காலத்தில்

ஒக்டோபர் 1 - 31 வரையான NSB சேமிப்பு மாதத்தில்,
இத்துரு மித்துரு கணக்கில் பணத்தை
வைப்புச்செய்ய ஆரம்பியுங்கள்.

- வழமையான வட்டி விகிதத்தைவிட 0.5% கூடுதலான வட்டி.
- நீங்கள் ரூபா.50[illegible]/- அல்லது அதற்கு மேலாக உங்கள் கணக்கில் பேணி வந்தால் எமது சலுகை அட்டை மற்றும் காலாண்டு பரிசு போட்டிக்கும் தகுதி பெறலாம்.



தேசிய சேமிப்பு வங்கி-உங்கள் குடும்ப வங்கி

# ஊர்காவலர்களை விடுவித்து புலிகள் நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும்

## அமைச்சர் மங்கள சமரவீர கேட்கிறார்

கொழும்பு,ஒக்.15

புலிகளால் தடுத்துவைக்கப்பட்டுள்ள இரண்டு ஊர்காவல் படையினரையும் விடுதலை செய்து தமது நல்லெண்ணத்தைப் புலிகள் வெளிப்படுத்தவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார் அரச பேச்சாளரும் அமைச்சருமான மங்கள சமரவீர.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவுகளை அறிவிப்பதற்காக நேற்று நடைபெற்ற வாராந்தச் செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திருகோணமலையில் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இரண்டு ஊர்காவல் படையினரின் பெற்றோர்களையும் நான் நேரில் சென்று சந்தித்தேன். என்னுடன் அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவும் உடன் வந்திருந்தார்.

புலிகளால் தடுத்துவைக்கப்பட்டுள்ள இரண்டு ஊர்காவல் படையினரையும் விடுவிக்க அரசு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். ஆனால், அவர்களை விடுவிக்க புலிகள் விதிக்கும் நிபந்தனைகளை அரசு ஏற்காது. நீதிமன்றத்தால் சட்டரீதியாகத் தடுப்புக் காவலில வைக்கப்பட்டிருக்கும் புலி உறுப்பினர்களை விடுதலை செய்து ஊர்காவல் படையினரை மீட்கமுடியாது. நீதித்துறை நிர்வாகத்தில் அரசு தலையிட முடியாது என்பதைத் திட்டவட்டமாகக் கூறிவிட்டோம்.

அதேவேளை, ஊர்காவல் படையினரின் பெற்றோருக்கு அளித்த வாக்குறுதியின்படி யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஊடாகவும் வேறு மார்க்கங்களிலும் ஊர்காவல் படையினரை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது.

இப்பொழுது வழமையான நீதி, நிர்வாக நடைமுறைகளுக்கு அமைய நீதிமன்றத்தால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த பத்து புலி உறுப்பினர்களும் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் புலிகளின் நிபந்தனைகளுக்கு அமையவே அரசு, புலி உறுப்பினர்களை விடுவித்தது என இதற்கு அர்த்தம் கொள்ளக்கூடாது. நிபந்தனையை ஏற்று புலிகளை விடுதலை செய்தால் எதிர்காலத்தில் அது விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நாம் நன்கு அறிவோம்.

இப்பொழுது நேர்மையான முறையில் புலி உறுப்பினர்கள் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்திலாவது புலிகள் தாம் தடுத்துவைத்துள்ள ஊர்காவல் படையினர் இருவரையும் விடுதலை செய்து தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும் - எனவும் அமைச்சர் மங்கள சமரவீர கோரினார். (எ-க)

## ஜி.சீ.ஈ. (சா/த) தரமாதிரி வினாத்தாளில் திருத்தம்

இன்றைய உதயனின் 8ஆம், 9ஆம் பக்கங்களில் பிரசுரமாகியுள்ள விஞ்ஞானமும் தொழில் நுட்பவியலும் பகுதி I, பகுதி II வினாத் தாள்களில் → என்ற குறியீடு வரவேண்டிய இடங்களில் ® என்ற குறியீடு தவறுதலாக இடம்பெற்றுள்ளது. எனவே, ® என்ற குறியீடு உள்ள இடங்களில் → என்ற குறியீட்டைப் பயன்படுத்தி வினாத்தாளை சரிபார்த்துக் கொள்ளுமாறு மாணவர்கள் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

# ஊர்காவலர்களை விடுவிக்கக் கோரி திருமலையில் நேற்று ஆர்ப்பாட்டம்

திருகோணமலை,ஒக்.15

விடுதலைப் புலிகள் வசம் உள்ள இரு ஊர்காவலர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறுகோரி திருகோணமலையிலுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகம் முன்பாக நேற்று ஒரு குழுவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜே.வி.பி. அமைப்பின் ஆதரவாளர்கள் சுமார் நூறு பேர்வரையிலானோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். நண்பகலில் ஒரு மணிநேரம் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

திருகோணமலை மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியில் இருந்து சுமார் நூறு பேர் வரையிலானோர் ஊர்வலமாக, உட்துறைமுக வீதியில் உள்ள கண்காணிப்பு குழு அலுவலகத்திற்குச் சென்றனர். அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தையொட்டி, கண்காணிப்புக் குழுவின் அலுவலகம் முன்பாக பொலீஸ் மற்றும இராணுவக் காவல் பலப்படுத்தப்பட்டிருந்தது. அலுவலகத்தின் பிரதான கதவுகள் மூடப்பட்டிருந்தன. திருகோணமலையில் மூவின மக்களுக்கும் இடையில் பதற்றம் பரவாமல் இருக்கும் வகையில் ஊர்காவல் படையினர் இருவரையும் விடுவிக்க கண்காணிப்புக் குழு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் வற்புறுத்தினர். "கண்காணிப்புக் குழுவே வெளியேறு!", "ஊர்காவல் படையினரை விடுவிக்க நடவடிக்கை எடு!" போன்ற கோஷங்களை அவர்கள் எழுப்பினர்.

'கிழக்கு மக்கள் சங்கம்' என்ற பெயரில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த வீரசேகர தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த ஊர்காவல் படையினரின் உறவினர்கள், தமது உறவுகள் விடுவிக்கப்படக் கூடிய ஒரு சூழல் ஏற்பட்டுள்ள நிலையில் சிலர் அதனைவைத்து அரசியல் இலாபம் தேட முற்படுகின்றார்கள் என்று தெரிவித்தனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் திருகோணமலையில் அழைப்பு விடுக்கப்பட்ட ஹர்த்தாலால் சிறிது சோபையிழந்திருந்த சிங்களப் பகுதிகளும் நேற்று வழமைக்குத் திரும்பின. (எ-க)

# ரயில் மோதி ஜோடி யானைகள் புதனன்று வவுனியாவில் பலி!

வவுனியா பூனாவைப் பகுதியில் ஆணும் பெண்ணுமாக ஒரு ஜோடி யானைகள் நேற்று முன்தினம் அதிகாலை ரயிலில் மோதிப் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளன. கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி வந்த ரயிலுடனேயே இந்த யானைகள் மோதுண்டன.

இப்பகுதியில் ஏற்கனவே பலமுறை இப்படி யானைகள் ரயிலில்மோதுண்டு உயிரிழந்துள்ளன. அண்மைக்காலத்தில் மட்டும் எட்டு யானைகள் இப்படி பலியாகியிருக்கின்றன என்றும் கூறப்பட்டது.

இப்பகுதியில் யானைகள் நடமாடுவதால் ரயில்கள் மெதுவாகப் போகவேண்டும் என்ற அடையாளப் பலகை ரயில பாதை ஓரத்தில் நடப்பட்டுள்ளது. ஆனால், இத்தகைய விபத்துக்களோ தொடர்கின்றன.

வனவளத்துறையினரும், பொலீஸாரும் புதனன்று நடந்த விபத்தில் இறந்த யானைகளின் உடல்களை விசாரணையின் பின் அங்கிருந்து அகற்றினர். (எ-க)

# இவருக்கு உதவுங்கள்!



முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு வள்ளிபுனத்தைச் சேர்ந்த ஆ.கஜேந்திரன் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். பதினேழு நாள்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை வழங்கப்பட்ட பின்னர் இப்போது கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

சிறுநீரக மாற்றுச் சிகிச்சை செய்யவேண்டிய உடல்நிலையில் உள்ள இவருக்கு 25 வயது. வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இவர்களது குடும்பத்தினால் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்குரிய பணத்தைத் தேடிக்கொள்வது இயலாத ஒன்று.

அதனால் கருணை உள்ளம் கொண்ட அன்பர்களை உதவுமாறு கர்ப்பிணியான கஜேந்திரனின் மனைவி பிருந்தா உருக்கமாகக் கேட்டுக்கொள்கிறார்.

இரக்க சிந்தையும், மனிதாபிமானமும் கொண்ட அன்புள்ளம் கொண்டவர்கள், மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையில் (கிளை இல.: 030) இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள 207-038565-2 இலக்கக் கணக்குக்கு தமது நன்கொடைகளை அனுப்புமாறு திருமதி பிருந்தா கஜேந்திரன் கேட்டுக்கொள்கின்றார்.

ஓர் இளம் குடும்பத்தின் வாழ்வுக்கு வழிசெய்வதற்குப் பரோபகாரிகளே உதவுங்கள்.



நிரந்தர சமாதானத்துக்கான 113ஆவது சர்வமத தியானப் பிரார்த்தனை நிகழ்வுக்கென யாழ். வருகைதந்துள்ள சௌமிய இளைஞர் நிதியம் மற்றும் வடக்கு - தெற்கு சமாதான நிதியத்தின் உறுப்பினர்கள் நேற்றிரவு யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பாதியை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படம். (படம்: பிரபா)

# ஆனால் பரிசீலிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்படவில்லை. சில சமயங்களில் 2000 ஓகஸ்டில்தான் முன்வைத்த அரசமைப்புத் திருத்த நகலின் அடிப்படையில் ஏதேனும் யோசனைத் திட்டங்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தயாரித்திருக்கக்கூடும்.

அப்படி மாற்று யோசனை எதையாவது அரசு தயாரித்து அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பினரிடம் கையளித்தாலும் அதை நாம் பரிசீலிக்கவோ அல்லது கவனத்தில் எடுக்கவோ வேண்டிய தேவையே எழாது.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக முன்னர் ஆட்சியிலிருந்த ரணில் விக்கிரமசிங்க அரசு மூன்று யோசனைகளை முன்வைத்தது. அவற்றில் இரண்டை நாம் நிராகரித்துவிட்டோம். மூன்றாவது யோசனையை நாம் அடியோடு நிராகரிக்காவிட்டாலும், அது அப்படியே இருக்க, நாங்களே ஒரு மாற்று யோசனையை 'இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கான பிரேரணை' என்ற பெயரில் முன்வைத்திருக்கின்றோம். எனவே, அவற்றின் அடிப்படையில் பேச்சை ஆரம்பிக்க வேண்டியதே அடுத்தகட்ட நகர்வாக இருக்கவேண்டும்.

மாறிமாறி யோசனைகளை முன்வைப்பதும், மாற்று யோசனைகளுக்கு வேறு மாற்று யோசனைகள் முன்வைக்கப்படுவதும் அரசு மாறும் போது யோசனைகளை மாற்றுவதும் பேச்சுக்குச் சரிப்பட்டுவராது.

அரசுத்தரப்பு இன்னொரு யோசனையை முன்வைக்கவேண்டியதில்லை என்பதையும் -

அப்படி வைத்தால் அதைப் பரிசீலிக்க வேண்டிய தேவை வராது என்பதையும் -

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்கனவே திட்டவட்டமாகத் தெளிவுபடுத்திவிட்டார். எனவே, இதுவிடயத்தில் புலிகளின் நிலைப்பாடு வெளிப்படையானது.

ஆகவே, புலிகளின் பதிலுக்குக் காத்திருக்க வேண்டிய தேவையே இல்லை.

- இவ்வாறு அவ்வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன. (எ-க)

# மாற்று யோசனைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிலளித்தார்.

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக அரசுத் தரப்பும், புலிகள் தரப்பும் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. புலிகள் இயக்கம் பேச்சுக்கு வராமல் இழுத்தடிப்பதாக அரசுத் தரப்பும், அரசு இழுத்தடிப்பதாகப் புலிகள் தரப்பும் பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களைச் சுமதத்து வருகின்றன. உண்மையான நிலைப்பாடு என்ன? - என்று செய்தியாளர்கள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினர்.

பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகின்றது. புலிகளுடன் பேசுவதற்கான மாற்று ஆலோசனைகளையும் அரசு தயாரித்து விட்டது. பேச்சை ஆரம்பிப்பதில் எந்தத் தடையும் இல்லை.

ஜனாதிபதியினால் உருவாக்கப்பட்டுள்ள தேசிய ஆலோசனைச் சபைக்கும், சமாதானப் பேச்சுக்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. ஆனால், சமாதானப் பேச்சுக்கு மாற்றீடாகவே தேசிய ஆலோசனைச் சபை அமைககப்பட்டுள்ளது என்றும் சமாதானப் பேச்சை இழுத்தடிக்கவே ஜனாதிபதி ஆலோசனைச் சபையை நிறுவியுள்ளார் என்றும் கூறப்படுவது விசமத்தனமான பிரசாரமாகும். பேச்சுக்கான சகல செயற்றிட்டங்களையும் ஜனாதிபதி பூர்த்தி செய்துவிட்டார். புலிகளின் வரைவுக்கான ஆலோசனைகளும் தயாரிக்கப்பட்டுவிட்டன.

தமிழீழ விடுதலைப் புலிகள் தற்பொழுது ஐரோப்பிய நாடுகளில் சட்டவரைஞர்களுடனும், தமது ஆலோசகர்களுடனும் கலந்துரையாடல்களை நடத்திவருகின்றனர்.

நாடு திரும்பியபின் சமாதானப் பேச்சுத் தொடர்பாக அவர்கள் ஒரு தீர்மானத்திற்கு வருவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு ஏற்பட்டுள்ளது. புலிகளிடமிருந்து சமிக்ஞை கிடைத்தவுடன் அரசின் மாற்று ஆலோசனைகள் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்படும் - என்றும் அமைச்சர் மங்கள சமரவீர கூறினார்.

"அப்படியானால் அரசின் மாற்று ஆலோசனை ஊடகங்களுக்கும், பொதுமக்களுக்கும் அறிவிக்கப்படுமா? அதில் அடங்கியுள்ள முக்கியமான சில ஆலோசனைகளை இப்போது கூறமாட்டீர்களா?" - எனச் செய்தியாளர்கள் கேட்டனர்.

நிச்சயமாக வெளியிடுவோம். ஆனால், இப்போது அல்ல. சமயம் வரும்போது தருவோம். இதற்கு மேல் மாற்று ஆலோசனைகள் தொடர்பாகக் கூறுவது உசிதமில்லை எனப் பதில் அளித்தார் அமைச்சர்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைகளை அரசு வரவேற்கின்றது. தடைப்பட்ட சமாதானப் பேச்சுக்களை ஒஸ்லோ இணக்கப்பாட்டின் அடிப்படையில் மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்கிறார் ஐ.தே.க. தலைவர். இதே கோட்பாடுகளின்படியே பேச்சு ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதியும் தேசிய ஆலோசனைச் சபை அங்குரார்ப்பண உரையில் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

சமாதானப் பேச்சில் ஜனாதிபதியும், எதிர்க்கட்சித் தலைவரும் ஒரே கருத்தைக் கொண்டிருப்பதால் பேச்சுகளை ஆரம்பிப்பதில் எந்தச சிக்கலும் இருக்காது.

சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் தனது ஒத்துழைப்பை வழங்க வேண்டும். ஆலோசனைச் சபைக் கூட்டங்களில் கலந்துகொண்டு இவ்விடயம் தொடர்பான ஆலோசனைகளை வழங்க வேண்டும் எனவும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அரசின் சார்பில் மீண்டும் மீண்டும் அழைப்பு விடுக்கின்றேன் - என்றும் அமைச்சர் மங்கள சமரவீர செய்தியாளர்களிடம் கூறினார். (எ-க)

# பாலசிங்கம் வரைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து தோற்றம் எடுத்த, அதன் ஒடுக்குமுறை வடிவங்களும், அதற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட அரசியல் போராட்ட நடவடிக்கைகளுமாகத் தமிழ்த் தேசியத்தின் தோற்றம், எழுச்சி பற்றி இந்நூலின் முதற் பகுதி துல்லியமாக எடுத்துக் கூறுகின்றது.

அமைதி வழியிலான அஹிம்சைப் போராட்டம் அரச பயங்கரவாதத்தினால் நசுக்கப்பட்டதையடுத்து தமிழ் இளைஞரின் அரசியல் வன்முறைக் கிளர்ச்சி தோற்றம் கொண்ட காலகட்டத்தையும், அப்புற நிலையில் முகிழ்ந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தினது வளர்ச்சி, எழுச்சி, அகட்சி பற்றியும் இந்நூல் விரிவாக எடுத்தியம்புகிறது.

இலங்கையில் இந்திய அரசு தலையீடு செய்த கொந்தளிப்பான காலகட்டத்தையும் (1983முதல்1990 வரை), அவ் வரலாற்றுக் காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் எதிர்கொண்ட சவால்களையும் நெருக்கடிகளையும் ஒரு நீண்ட அத்தியாயத்தில் விவரிக்கின்றார் பாலசிங்கம்.

விடுதலைப் புலிகள் பங்குகொண்ட சகல சமாதானப் பேச்சுக்களையும் "இந்திய மத்தியஸ்தத்துடன் நிகழ்ந்த திம்பு பேச்சுக்களில் தொடங்கி நோர்வே அனுசரணையுடன் நடந்த சமீபத்திய பேச்சுக்கள்வரை" அவற்றின் குறை, நிறைகளைம் தமது சொந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு திறனாய்வு செய்கிறார் பாலசிங்கம்.

தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்ட வரலாற்றை ஆழமாக ஆய்வுசெய்யும் இந்நூலில், இதுவரை வெளிவராத சுவாரசியமான தகவல்களும் விடயங்களும் பொதிந்துள்ளன.

ஆங்கில மொழியில் வெளியாகும் இந்நூலை தமிழில் மொழி பெயர்த்து விரைவாக வெளியிடுவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுவதாகத் தெரிகின்றது. (எ-க)

## அமெரிக்க அதிபர் தேர்தலில் இழுபறி நிலை

# வெற்றிபெறுவது புஷ்ஷா? கெரியா? என்ற கருத்துக் கணிப்புகளில் மாறுபட்ட தகவல்!

வாஷிங்ரன்,ஒக்.15

அமெரிக்க அதிபர் தேர்தலில் யாருக்கு அதிக ஆதரவு இருக்கிறது என்பதைக் கணிக்க நடந்த பல்வேறு கருத்துக்கணிப்புகளில் பல்வேறு முடிவுகள் கிடைத்துள்ளன.

நவம்பர் 2ஆம் திகதி அதிபர் பதவிக்கான வாக்குப்பதிவு நடக்கவுள்ளது. குடியரசுக் கட்சி சார்பில் அதிபர் ஜோர்ஜ் புஷ் மீண்டும் போட்டியிடுகிறார். ஜனநாயகக் கட்சியின் சார்பில் ஜோன் கெரி போட்டியிடுகிறார். தேர்தலுக்கு இன்னும் 3 வாரங்கள் இருக்கும் நிலையில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகளில் இருவருக்கும் இடையிலான இடைவெளி மிகவும் குறைந்துவருவது தெரியவந்துள்ளது.

சி.என்.என்., யு.எஸ்.ஏ.டுடே., கேலப் ஆகியன கூட்டாக நடத்திய கருத்துக்கணிப்பில் ஜனநாயகக் கட்சியின் ஜோன் கெரிக்கு 49 வீத ஆதரவு இருப்பதாகத் தெரியவந்துள்ளது. ஆனால், ஜோர்ஜ் புஷ்ஷுக்கு 48 வீத ஆதரவு தான் உள்ளது என்று அந்தக் கருத்துக்கணிப்புக் கூறுகின்றது.

ஆனால், கெரியை விட ஜோர்ஜ் புஷ்ஷுக்கு 5 சதவீதம் அதிக ஆதரவு உள்ளது என்று ஏ.பீ.சி. நியூஸ் நிறுவனமும், வாஷிங்ரன் போஸ்ட் இதழும் இணைந்து நடத்திய கருத்துக்கணிப்புக் கூறுகின்றது.

ஜோர்ஜ் வாஷிங்ரன் பல்கலைக்கழகமும் பேட்டில் கிரவுண்ட் அமைப்பும் இணைந்து நடத்திய மற்றொரு கருத்துக் கணிப்பில் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு 49 வீத ஆதரவும் ஜோன் கெரிக்கு 46 வீத ஆதரவும் இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

எனவே, அதிபர் தேர்தலில் யார் வெற்றி பெறுவர் என்பதை உறுதியாகக் கூறமுடியாத அளவுக்குப் போட்டி கடுமையாக உள்ளது. 2000ஆம் ஆண்டில் நடந்த தேர்தலிலும் இதே போன்ற நிலைதான் இருந்தது. புளோரிடா மாகாணத்தில் மறுவாக்கு எண்ணிக்கைக்கு உத்தர விட்டதால் ஜனநாயகக் கட்சியிடமிருந்து அதிபர் பதவி நூலிழையில் கைநழுவிப் போய்விட்டது.

இப்போதைய கருத்துக் கணிப்புக்களைப் பார்த்தால் அதேபோன்ற இழுபறி நிலைமையே இத்தேர்தலிலும் ஏற்படுமோ என்ற எண்ணம் எழுந்துள்ளது.

அமெரிக்காவின் முக்கியமான நண்பரான ஆஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹாவர்ட் அண்மையில் நடந்துமுடிந்த தேர்தலில் மீண்டும் வெற்றிபெற்று ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறார். ஆப்கானிஸ்தானில் ஓரளவு அமைதியாகத் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. இவை ஜோர்ஜ் புஷ்ஷுக்கு உற்சாகம் அளிப்பதாக அமைந்துள்ளன. (க-8)

# மத்தியதரக் குடும்பங்களின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது புஷ்ஷின் ஆட்சியிலேயே!

## ஜனநாயகக் கட்சி வேட்பாளர் கெரி குற்றச்சாட்டு

வாஷிங்ரன்,ஒக்.15

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷின் ஆட்சிக்காலத்தில் மத்தியதரக் குடும்பங்களின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதாக ஜனநாயகக் கட்சியின் சார்பில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜோன் கெரி குற்றம் சாட்டினார்.

அதிபர் புஷ்ஷுடனான மூன்றாவது நேரடி விவாதத்தின் போத மேற்கண்டவாறு கெரி தெரிவித்தார்.

கெரி வழங்கிவரும் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற 1.2 ட்ரிலியன் டொலர்கள் தேவைப்படும் என்று புஷ் தெரிவித்தார். இந்தத் தொகையை ஜோன் கெரியால் திரட்டமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே, நடைபெற்ற இரு நேரடி விவாதங்களிலும் கெரியே வெற்றிபெற்றார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்நிலையிலேயே, மூன்றாவது விவாதமும் இடம்பெற்றது.

அமெரிக்காவின் இளைய தலைமுறையினருக்கு சிறந்த வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கான திட்டம் தன்னிடமுள்ளதாகக் கெரி தெரிவித்தார். இம்முறை இரு வேட்பாளர்களுக்குமிடையில் உள்நாட்டு விவகாரமே பிரதான இடத்தைப் பெற்றிருந்தது.

முன்னைய இரு விவாதங்களிலும் சர்வதேசப் பயங்கரவாதம், ஈராக் மீதான போர் என்பன தலைதூக்கியிருந்தன. இம்முறை உள்நாட்டுப் பொருளாதாரம், அபிவிருத்தி என்பன முக்கிய இடம்வகித்தன. (க-8)

## பாக்.நாடாளுமன்றத்தில் உறுப்பினர் அமளி துமளி

பாகிஸ்தான் அதிபர் முஷாரப் இராணுவத் தளபதிப் பதவியையும், அதிபர் பதவியையும் தன்னிடமே வைத்திருக்கிறார். தளபதி பதவியை விட்டுவிடப் போவதாக முன்பு கூறிய முஷாரப், இப்போது அதற்கான நேரம் வரவில்லையென்று கூறியுள்ளார்.

இரு பதவியிலும் அவர் தொடர்ந்து நீடிக்க வகை செய்யும் சட்ட மசோதா நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. இந்த மசோதா மீது நேற்றுமுன்தினம் காரசாரமான விவாதம் நடைபெற்றது. அப்போது எதிர்க்கட்சியினர் கடும் அமளிதுமளியில் ஈடுபட்டனர். (க-8)

## பயிற்சிப் போர் விமானங்களை சவூதியிடம் பாக்.ஒப்படைப்பு

இஸ்லாமாபாத்,ஒக்.15

சவூதி அரேபியாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி அந்நாட்டுக்கு 8 பயிற்சிப் போர்விமானங்களைப் பாகிஸ்தான் செவ்வாய்க்கிழமை வழங்கியது.

இதற்கு முன்னர் இதுபோன்ற பயிற்சிப் போர் விமானங்களை ஈரான் மற்றும் ஓமான் நாட்டுக்குப் பாகிஸ்தான் விற்பனை செய்துள்ளது. இதையடுத்து சவூதி அரேபியா 20 பயிற்சிப் போர் விமானங்களை வாங்கப் பாகிஸ்தானுடன் ஒப்பந்தம் செய்திருக்கிறது.

இந்தப் போர்விமானங்கள் முற்றிலும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

உலக அரங்கில்

# குடலிறக்க நோயால் துடித்த சதாமுக்கு அறுவைச் சிகிச்சை



பக்தாத்,ஒக்.15

அமெரிக்க இராணுவ மருத்துவமனையில் சதாம் ஹுசைனுக்கு குடலிறக்க அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. ஈராக்கில் ஆட்சியிலிருந்து விரட்டப்பட்ட சதாம் ஹுசைன் கடந்த ஆண்டு டிசெம்பர் 13 இல் அமெரிக்க இராணுவத்திடம் சிக்கினார்.

அமெரிக்க இராணுவப் பாதுகாப்பில் இரகசிய இடத்தில்அவர் அடைத்து வைக்கப்பட்டுள்ளார். அதிபராக இருந்தபோதே சிறுநீரகப் பாதிப்பு, குடலிறக்க நோய் உள்ளிட்டவைகளால் சதாம் பாதிக்கப்பட்டிருந்தார். கடந்த சில வாரங்களாக குடலிறக்க நோயால்அவர் அதிகம் அவதிப்பட்டார்.

இதையடுத்து அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்ய முடிவு செய்யப்பட்டது. பக்தாத்தில் அமெரிக்க இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ஜபன் சினா மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. ஒரு மணிநேரம் நடந்த அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் சதாம் உடல்நலம் தேறியுள்ளார். இரண்டு வாரத்துக்கு முன் அறுவைச் சிகிச்சை நடந்ததாகப் பெயர் சொல்ல விரும்பாத அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-8)

# கண்டாவளை - வெளிக்கண்டல் வீதி செப்பனிடப்பட்டும் பேருந்து இல்லை!

பரந்தன்,ஒக்.15

கண்டாவளை வெளிக்கண்டல் வீதி செப்பனிடப்பட்ட பின்னரும் அவ்வீதியில் பேருந்துச் சேவை இடம்பெறாமை குறித்து அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்திருக்கின்றனர்.

ஐந்தரைக் கிலோமீற்றர் நீளமான மேற்படி வீதி செப்பனிடப்படாது குண்டும் குழியுமாகக் காணப்பட்டதால் முன்னர் அவ்வீதியில் இடம்பெற்ற பேருந்து சேவை நிறுத்தப்பட்டது. தற்போது அந்த வீதி கிரவல் போட்டு செப்பனிடப்பட்டுள்ளது. இதன் பிறகும் அங்கு பேருந்துச் சேவை இடம்பெறாமல் இருப்பது கண்டு கண்டாவளை ஊடாக வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு போன்ற இடங்களுக்குச் செல்லும் மக்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நோயாளர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதிலும், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பாடசாலை செல்வதிலும் அரச ஊழியர்கள் தங்கள் கடமைக்குச் செல்வதிலும் பெரும் இடர்பாடுகளை எதிர் நோக்குகின்றனர்.

இனியாவது இவ்வீதியில் பேருந்துச் சேவை ஆரம்பிக்கப்படவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர். (4-352)

## அன்பு முன்பள்ளியில் சிறுவர்களுக்குக் கௌரவிப்பு

புதுக்குடியிருப்பு, அன்பு குடியிருப்பு 'அன்பு' முன்பள்ளியில் சர்வதேச சிறுவர் தினம் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் சிறுவர்களுக்கு மாலை அணிவித்து ஆசிரியர்கள், பெற்றோர் அவர்களை வரவேற்று முன்பள்ளி கட்டடத்திற்கு அழைத்துச்சென்று அவர்களுக்கு பரிசுப் பொருள்களை வழங்கினர்.

சிறுவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. சிறுவர்கள் மகிழ்ச்சியாக ஆடிப்பாடினார்கள்.

இவற்றினைத் தொடர்ந்து ஆசிரியர்களைக் கௌரவித்து மாலை அணிவித்து ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் பொதுமக்கள், பெற்றோர் உட்படப் பல கலந்துசிறப்பித்தனர். (4-353)

# 'அலைபாடும் பரணி' ஒலி நாடா முல்லைத்தீவில் வெளியீடு!

## கேணல் சூசை வெளியிட்டு வைத்தார்

புதுக்குடியிருப்பு,ஒக்.15

நிதர்சனத்தின் வெளியீடான 'அலைபாடும் பரணி' ஒலிநாடாவின் வெளியீட்டு விழா கடந்த கடந்த வாரம் முல்லைத்தீவில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் இந்த வெளியீட்டு நிகழ்வில் கடற் புலிகளின் தளபதிகளில் ஒருவரான சலீம் பொதுச்சுடர் ஏற்றினார். மற்றொரு தளபதியான மங்களேஸ் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

அங்கு விசேடமாக அலங்கரிக்கப்பட்ட மேடையில் லெப்.கேணல் நிரோஜனின் திருவுருவப்படமும் அவருடன் வீரச்சாவைத் தழுவிய ஏனைய மாவீரர்களின் திருவுருவப் படங்களும் வைக்கப்பட்டிருந்தன.

அவற்றிற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

போராளி வீரா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வரவேற்புரையினை செல்வி பிரமிளாவும் வெளியீட்டு உரையினை நிதர்சனம் நிறுவனப் பொறுப்பாளர் சேரலாதனும் நிகழ்த்தினர்.

தொடர்ந்து கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஒலிநாடாவை வெளியிட்டு வைத்து சிறப்புரையாற்றினார்.

அதனை அடுத்து ஒலிப்பதிவு நாடா வெளிவர உழைத்தவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

தமிழீழ இசைக்குழுவின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. (4-353)




# ஆண்டான்குளம் வயல்களில் சிறுபோக அறுவடை விழா

பரந்தன்,ஒக்.15

மன்னார், ஆண்டான்குளம் குளப்படுக்கையில் இந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கையின் அறுவடைவிழா கடந்த 9ஆம் திகதி நடைபெற்றது.

இம்முறை 105 ஏக்கர் வயலில் அங்கு சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

மன்னார் மாவட்ட விதை உற்பத்தியாளர் சங்கத் தலைவர் சௌந்தரநாயகம் தலைமையில் முற்பகல் 10.30 மணிக்கு அறுவடை விழா ஆரம்பமானது.

நிகழ்வின் பொதுச்சுடரினை மன்னார் மாவட்ட அரச அதிபர் விசுவலிங்கம் மற்றும் மன்னார் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் எம். எல்.ஹுசைன், மன்னார் மாவட்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் சிவனேசன், கிளிநொச்சி மாவட்ட கமக்காரர் சம்மேளனத் தலைவர் மனோகரன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனப் பணிப்பாளர் இளம்பரிதி ஏற்றிவைத்தார். தொடர்ந்து 105 ஏக்கர் நெற்செய்கை அறுவடை விழா நிகழ்வை மன்னார் மாவட்ட அரச அதிபர் விஸ்வலிங்கம், ஹுசைன், இளம்பரிதி ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். (4-352)

# பூநகரிப் பிரதேச மாவீரர்களின் நினைவாக உதைபந்தாட்டப் போட்டி

பூநகரி,ஒக்.15

பூநகரிப் பிரதேச மாவீரர்களின் நினைவாக பூநகரியில் இன்றும் நாளையும், நாளை மறுதினமும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்று நடைபெறவிருக்கிறது.

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஆதரவுடன் பூநகரி பிரதேச விளையாட்டுத்துறையினர் இந்தப் போட்டியினை நடத்துகின்றனர்.

பூநகரி, இரணைமாதா நகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கும் இப்போட்டியில் 32 கழகங்கள் பங்குபற்றுகின்றன.

முதலாம் இடம்பெறும் கழகத்திற்கு வெற்றிக்கிண்ணமும் 10 ஆயிரம் ரூபா பணப் பரிசும், இரண்டாம் இடம்பெறும் கழகத்திற்கு வெற்றிக் கிண்ணத்துடன் 5 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்படவிருப்பதாக தமிழீழ விளையாட்டுத் துறையின் பூநகரிப் பிரதேச இணைப்பாளர் எஸ்.மூர்த்தி தெரிவித்தார். (4-403)

# முல்லைத்தீவிலும் கால்வாய் நோய்: மாடு வெட்டுவதற்கு அங்கும் தடை

புதுக்குடியிருப்பு,ஒக்.15


முள்ளிவாய்க்கால், வலைஞர்மடம், அம்பலவாணர் பொக்கணை, மாத்தளன் ஆகிய பிரதேசங்களில் கால்நடைகளுக்கு கால்வாய் நோய் தாக்கல் காணப்படுவதுடன் ஏராளமான கால்நடைகள் இறந்துள்ளன.

இதனால் முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடைகள் வெட்டத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட கால்நடை வைத்திய அதிகாரி செல்வி சுகந்தினி தெரிவித்தார்.

ஏற்கனவே விசுவமடு, மண்ணாகண்டல், குமுழமுனை ஆகிய பிரதேசத்தில் இந்நோயின் தாக்கம் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்கிறது. இந்த நிலையில் இந்நோய் இப்போது மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் பரவத் தொடங்கியிருக்கிறது. இறைச்சி, பால் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது.

இவ்விடயம் காரணமாக கால்நடை வளர்ப்போர் விழிப்பாக இருக்கவேண்டும் என்றும் -

நோயின் அறிகுறிகள் தென்படின் உடனடியாக கால்நடை வைத்தியசாலைக்குத் தெரியப்படுத்தி இந்நோயில் இருந்து கால்நடைகளை பாதுகாக்குமாறும் கேட்கப்பட்டிருக்கிறது. (4-353)




நீங்களும் இப்படித்தானா?
உங்கள் விருப்பத்தை
மட்டுமே நினைக்கிறீர்களா?
மற்றவர்களுடைய விருப்பங்களைத்
தடை செய்வது, அவர்கள் மனதைத்
துன்பப்படுத்தும் என்பதை அறிவீர்களா?
உங்கள் விருப்பங்கள் என்றபெயரில் செய்பவை,
மற்றவர் கைகளைக்
கட்டிப் போடுவதாக இருந்தால்...

**நீங்கள் சிந்திக்க வேண்டிய தருணம் இதுவே!**
**வாழ்க்கை இனிமையாக வாழ்வதற்கே!**
**சித்திரவதைப் படுவதற்கு அல்ல!**

**உங்களால் மற்றொருவர் மனம்**
**சித்திரவதைப் பட்டுத் துன்பப்படுகிறதா என்பதை**
**யோசித்துப் பாருங்கள்.**
**வன்முறைகள் இல்லாத இல்லத்தை உருவாக்க**
**நீங்களும் உதவுங்கள்**

**இல்லத்து வன்முறைகளை**
**இல்லாதொழிக்க ஒன்றிணைவோம்.**

THOMPSON ASSOCIATES

**எச்சரிக்கை: உங்கள் அன்பு மற்றொருவருக்குப்**
**'பொன்விலங்கு' போலானால் - அது அன்பே அல்ல!**

நாம் இணைந்து
பெண்கள் மீதான வன்முறைகளை ஒழிப்போம்

பெண்கள் மீதான
வன்முறைகளை இல்லாதொழிக்கும்
இலங்கைப் பிரசாரத்திட்டம்
த.பெ. 2006, கொழும்பு.


# அந்தியேஷ்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர்

# ஐயா வேலுப்பிள்ளை

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12-08-1927 | 15-09-2004 |

இத்தரணியில் பூத்து, மலர்ந்து பெருவிருட்சமான எம் தந்தை இத்தரணியினை விட்டுச் சென்று ஒரு மாதம் கழிந்தாலும், அவர் உருவமும், அவர் பாசமும், அவர் அழைப்பொலியும் எங்களை விட்டு என்றென்றும் அகலாது. தந்தை என்று அழைக்க இனி ஒருவர் இல்லையே தவிர, அவர் உருவம் எங்கள் உள்ளத்தில் பூரண மதிபோல் என்றென்றும் பிரகாசித்துக் கொண்டே இருக்கும். உடலால் எம்முடன் இல்லாவிட்டாலும் உள்ளத்தால் எம்முடன் என்றென்றும் இருப்பார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

இன்று (15.10.2004) வெள்ளிக்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது அந்தியேட்டி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*குறுக்கு வீதி,*
*கரணவாய் மத்தி,*
*கரவெட்டி.*

(சி-38207) (24-11-45)

**மனைவி, பிள்ளைகள்,**
**குடும்பத்தினர்.**

உதயன்

## சட்டத்தின் பிடியில் சிக்கும் அதிகாரிகள்

இலங்கை இராணுவ அதிகாரிகளின் 'பெருமை' பிரசித்தமாகத் தொடங்கியிருக்கிறது. வருமானத்திற்கு அதிகமாக - கணக்குக் காட்டமுடியாத வகையில் - சொத்துச் சேர்த்த வழக்கில் சிக்கிய இராணுவ மேஜர் ஜெனரல் ஒருவர் கட்டாய லீவில் வீட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்.

மேலும் நான்கு மேஜர் ஜெனரல்கள் ஊழல், மோசடி விசாரணைக்குழுவின் வலையில் சிக்கும் நிலையில் இருக்கிறார்கள் எனக்கூறப்படுகின்றது.

அவர்களில் ஒருவர் இராணுவத் தளபதிக்கு அடுத்த நிலையில் இருந்து அண்மையில் ஓய்வுபெற்றவர்; இரண்டாவது நபர் இப்போதும் சேவையில் இருப்பவர். விரைவில் ஓய்வு பெறும் நிலையை எதிர்பார்த்திருப்பவர். மூன்றாவது மேஜர் ஜெனரல் ஓய்வுக்குப் பின் பாதுகாப்புத்துறை சம்பந்தமான உயர் பதவியில் இப்போதும் கடமை புரிபவர். நான்காவது மேஜர் ஜெனரல் தமது பதவிக்காலத்தை முடிக்க முன்னரே வேறு பிரச்சினைகளில் சிக்கியதால் 'நாகரிகமான முறையில்' இராணுவத்தில் இருந்து - ஓய்வூதிய வசதிகளோடு - விடுவிக்கப்பட்டவர்.

இவர்கள் சம்பாதித்துக் குவித்துள்ள அசையும், அசையாச் சொத்துக்கள் எப்படி இவர்களுக்கு வந்தன, அவற்றிற்கான வருமானம் எப்படிக்கிடைத்தது என்பன பற்றியெல்லாம் லஞ்சத் திணைக்கள அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். அதற்கு இவர்கள் விளக்கம் கொடுக்கவேண்டிய நிலையில் உள்ளனர்.

இப்படி இராணுவ உயர் அதிகாரிகளுக்கு எதிராக உயர்மட்டத்தில் விசாரணை நடப்பது இப்போதுதான் புதிய விவகாரமல்ல.

முன்னாள் இராணுவத் தளபதிகள் இருவருக்கு எதிராகக் கூட அவர்கள் ஓய்வுபெற்ற பின் ஊழல் குற்றச்சாட்டுகளோடு தொடர்பான விவகாரங்கள் அலசப்பட்டன. எனினும் நடவடிக்கை ஏதுமின்றி அந்த விடயம் கிடப்பில் போடப்பட்டது.

இராணுவப் பேச்சாளருக்கு எதிராகவும் நீதிமன்றத்தில் வழக்கு உண்டு. போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து பல கோடி ரூபா பெறுமதியான சொத்தைக் கவர்ந்தார் என்ற குற்றச்சாட்டு அடங்கலாகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

இவையெல்லாம் கனிஷ்ட நிலை அதிகாரிகளோடோ அல்லது சிப்பாய்களோடோ சம்பந்தப்பட்ட விவகாரங்கள் அல்ல. சம்பந்தப்பட்டோர் எல்லோரும் ஜெனரல் தரத்தில் இருக்கும் அதிகாரிகள்.

சாதாரண அலுவலகப் 'பியோன்கள்' ஐம்பது ரூபா லஞ்சம் வாங்கும் போது கையும் மெய்யுமாகக் 'கப்' என பிடித்து விடுகின்றார்கள். ஒரு சிறிய அரச வேலையை விரைவாகச் செய்து கொடுப்பதற்காக அந்தப் 'பியோன்' பெறமுயன்ற 'சந்தோஷமாக' அது இருக்கும். இத்தகைய கீழ் மட்டத்தோரை வலை விரித்து மடக்குவது ஒன்றும் கஷ்டமான காரியம் அல்ல.

ஆனால், இந்த இராணுவ அதிகாரிகளின் விவகாரமோ வேறு. ஜெனரல் தரத்தில் இருக்கும் அதிகாரியைக் கையும் மெய்யுமாகப்பிடிப்பது வசதியல்ல. அவ்வளவுக்கு அவர்களுக்குக் கட்டுக்காவல், பந்தோபஸ்து, சோதனை, கெடுபிடி எல்லாம் இருக்கும். அவற்றை யெல்லாம் மீறி நேரடியாக அவர்களை மடக்குவது எந்த விசாரணைக் குழுவினாலும் - அதிகாரிகளினாலும் - இயலாத காரியம்.

நாட்டின் பாதுகாப்பையே கேள்விக்குள்ளாக்கி - அடகுவைத்து - பலடிகோடி ரூபாக்களை சுளையாகச் சுத்தி விடுவார்கள் இவர்கள். உள்நாட்டில் கட்டுக்காவலுடனோ, அல்லது வெளிநாட்டில் காதும், காதும் வைத்த மாதிரியோ 'கமிஷன்' கைமாறிவிடும்.

வெளிநாட்டில் கைமாறிய 'கமிஷன்' பணத்தைக் கண்டுபிடிப்பது 'மலையைக் கெல்லி எலியைப் பிடிப்பது' போன்ற காரியம்.

அந்தப் பணம் உள்நாட்டுக்குள் வந்தாலும் ஆயுத, தளபாடக் கொள்வனவிலேயே கோடிக்கணக்கான மோசடி செய்யும் இந்த 'மலை விழுங்கி மாதவ ராஜாக்களினால்' சொத்துக் கணக்குக் காட்டுவது அப்படி ஒன்றும் இயலாத காரியம் அல்ல.

அதில் கோட்டைவிடும் ஓரிரு நெத்தெலிகள் தாம் இப்போது சிக்குகின்றன. சுறாக்கள் சுதந்திரமாகத் திரிகின்றன.

'பினாமி' பெயர்களில் சொத்துக்களைச் சேகரிக்க வல்ல இந்தத் 'தாதாக்களை' சட்டத்தின் முன் வளைத்துப் போடுவதும், அதில் சிக்கவைத்துக் குற்றத் தீர்ப்பை சட்ட ரீதியாகப் பெற்றுக் கொடுப்பதும் மணலைக்கயிறாகத் திரிக்கும் வேலை.

எனவே, பாதுகாப்பு பந்தோபஸ்தின் பெயரில் - நாட்டைப் பெரும் யுத்தத்திற்குள் விழுத்தி, அதில் குளிர்காய்ந்து, குறுக்குவழியில் பணமீட்டும் கொழுத்த முதலைகளின் செயற்பாடு தங்கு தடையின்றித் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றது.

போரழிவுக்குள் இது ஒரு பேரழிவு.

குடாநாட்டில் அமைக்கப்பட்டுள்ள

# மீன் சந்தைப்படுத்தும் நிலையங்கள் எதிர்வரும் 27 ஆம் திகதி திறந்துவைப்பு

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிதியுதவியுடன் யாழ்.மாவட்டத்தில் மூன்று இடங்களில் அமைக்கப்பட்ட மீன் சந்தைப் படுத்தும் நிலையங்கள் எதிர்வரும் 27ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளன.

வேலணையில் இடம்பெறும் பிரதான நிகழ்வில் ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் இலங்கைக்காக தூதர் கலந்துகொள்வுள்ளார் -

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிதியுதவியுடன் உலக உணவு விவசாய நிறுவனத் திட்டத்தின் கீழ் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தினால் யாழ்.நகரம், பருத்தித்துறை, வேலணை ஆகிய மூன்று இடங்களில மீன் சந்தைப்படுத்தும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நிலையத்துக்கும் 3 கோடி ரூபா வீதம் 9 கோடி ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று நிலையங்களுக்கும் ஆறு குளிரூட்டி வாகனங்கள் வழங்கப்படவுள்ளன. ஒவ்வொரு சிறிய ரக லொறியும் வழங்கப் படவுள்ளது.

படகின் வெளியிணைப்பு இயந்திரங்கள், ஐஸ் பெட்டிகள், மீன்பிடி வலைகள் மற்றும் மீன்பிடிக்கான உபகரணங்கள் என்பனவும் அன்றைய தினம் மீன் சந்தைப் படுத்தும் நிலையங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொள்வதற்காக ஜேர்மன் சமஷ்டிக்குடியரசின் இலங்கைக்கான தூதர், ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவன அதிகாரிகள், உலக உணவு, விவசாய நிறுவன அதிகாரிகள், கடற்றொழில், நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கொழும்பில் இருந்து வருகைதரவுள்ளனர்.

வேலணையில் இடம்பெறும் பிரதான திறப்புவிழா நிகழ்வில் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன், கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம், உலக உணவு விவசாய நிறுவனத்தின் இணைப்பாளர் ஜோசப் மற்றும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன யாழ்.அலுவலக அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ்.நகரம் மற்றும் பருத்தித்துறை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள மீன் சந்தைப்படுத்தும் நிலையங்கள், வேலணையில் பிரதான நிகழ்வுகள் இடம்பெற்ற பின்னர் வைபவரீதியாக திறந்துவைக்கப் படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (10-7)

# நெற்செய்கை செய்யாதோரின் காணிகள் அடுத்த வருடத்தில் காணி இல்லாதோர் கைக்கு!

ஆனைக்கோட்டை மற்றும் கல்லுண்டாய் பகுதிகளில் இவ்வருடம் நெற்செய்கை மேற்கொள்ளப்படாத நெற்காணிகள் யாவும் அடுத்த வருடம் காணி இல்லாதவர்களுக்கு நெற்செய்கை மேற்கொள்ள. பெற்றுக் கொடுக்கப்படும் என்று சண்டிலிப்பாய் பிரதேச செயலர் க.சுப்பிரமணிய சர்மா தெரிவித்துள்ளார்.

பெரும்போக நெற்செய்கை ஆரம்பிக்கபபட்டுள்ளதால் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டிவைத்து வளர்க்குமாறு பொதுமக்களுக்கு அறிவித்தல் விடுத்தும் அவற்றைப் பொருட்படுத்தாது தொடர்ந்தும் கட்டாக்காலியாக விடுவதால் அவை நெற்பயிர்களை அழித்துவருதாக விவசாயிகள் புகார் தெரிவித்திருந்தனர்.

இதனைக் கவனத்தில்கொண்ட பிரதேச செயலர் கடந்த 12ஆம் திகதி ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் ச.சந்திரராசா தலைமையில் ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டையடியிலுள்ள சனசமூக நிலையமொன்றிற்கு அப்பகுதி விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் ஆகியோரை அழைத்து கலந்துரையாடலொன்றை நடத்தினார்.

இக்கலந்துரையாடலில் பெரும்போக நெற்செய்கை காலத்தில் குறைந்தது 3மாத காலத்திற்காவது கால்நடைகளைக் கட்டிவைத்து வளர்க்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டதுடன் நெற்செய்கை மேற்கொள்ளப் படாமல் தரிசு நிலங்களாக இருக்கும் காணிகள் அடுத்த வருடம் காணி இல்லாத விவசாயிகளுக்கு நெற்செய்கை மேற்கொள்வதற்குப் பெற்றுக்கொடுக்கப்படுமென்றும் தெரிவித்துள்ளார். (10-100)

# வடக்கு - கிழக்கு பகுதிநேர ஆங்கில ஆசிரியரின் விவரத்தை மாகாணச் செயலர் அனுப்பவில்லை!

## நியமனம் தாமதமாக அதுவே காரணமென்கிறார் அமைச்சுச் செயலர்

கொழும்பு,ஒக்.15

வடக்கு - கிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் விவரங்களை வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் அனுப்பிவைக்காமையே அவர்களின் நிரந்தர நியமனம் தொடர்பில் தாமதம் ஏற்படக் காரணம் என கல்வியமைச்சின் செய்லாளர் தாரா டி மெல் கூறியிருக்கிறார்.

கடந்த வாரம், இவ்வமைச்சில் வடககு - கிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுடன் நடத்திய சந்திப்பொன்றின்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

கல்வியமைச்சின் செயலாளர் தாரா டி மெல் சங்கப் பிரதிநிதிகளின் கருத்துக்களை கேட்டறிந்துகொண்டார்.

சங்கப் பிர்திநிதிகளிடம் கல்வியமைச்சின் செயலாளர் தாரா டி மெல் கூறுகையில் -

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் அங்குள்ள பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என கடிதம் மூலம் மட்டுமே கோரியிருந்தார்.

ஆனால், இது தொடர்பாக அந்த ஆசிரியர்களின் கல்வித் தகைமை மற்றும் விவரங்களை அவர் அனுப்பிவில்லை. எனினும், நான் ஜனாதிபதியிடம் கலந்துரையாடி விட்டு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக தீர்வைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பேன் என்று குறிப்பிட்டார். (க-8)

## மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.15

இவ்வருடம் நடைபெற்ற 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து மாவட்ட ரீதியாக முதல் 10 இடங்களைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை 10.30 மணிக்கு தமிழ் மாணவர் ஒன்றியக் கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் ப.குணேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன், யாழ். கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி க.சுப்பிரமணியம் ஆகியோரும் கலந்துகொள்வர். (10-202)

## நாளை

புரட்டாதி 30
சனிக்கிழமை
(16.10.2004)
திதி: துதியை
காலை 6.15 வரை
நட்சத்திரம் : விசாகம்
பின்னிரவு 12.29
சுபநேரம் : 03.02 - 04.32
ராகுகாலம் : 09.02 - 10.32
(பழைய நேரப்படி)

# வெள்ளைப்பிரம்பு தினத்தையொட்டி யாழ். நகரில் நாளை ஊர்வலம்

யாழ்ப்பாணம்,ஒக்.15

சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ். விழிப்புலனற்றோர் சங்கம், மற்றும் லியோக் கழகம் இணைந்து நடத்தும் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தின ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

இத்தினத்தையொட்டி ஒழுங்கு செய்யப்பட்ட ஊர்வலம் காலை 9 மணியளவில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகி யாழ்.சன்மார்க்க வித்தியாலயத்தை வந்தடையும். தொடர்ந்து அங்கு பொதுக் கூட்டம் இடம்பெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக லயன்ஸ் கழகத்தின் மாவட்டச் செயலாளர் லயன் எஸ்.ஞானராஜா கலந்துகொள்வார்.

இதனையடுத்து மாலை 6 மணியளவில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் யாழ். விழிப்புலனற்றோர் சாகித்திய இசைக்குழவின் இசை நிகழ்வும் இடம்பெறும். (10-203)

# யாழ். போதனா வைத்தியசாலையில் தண்ணீரைச் சுத்திகரிக்கும் பணி

யாழ்ப்பாணம்,ஒக்.15

யாழ்போதனா வைத்தியாலைக்கு தண்ணீரைச் சுத்திகரிக்கும் நடுத்தர இயந்திரம் ஒன்று எடுத்துவரப்பட்டு தண்ணீர் சுத்திகரிக்கும் பணி இடம்பெற்று வருகிறது.

இவ்வாறு சுத்திகரிக்கப்படும் தண்ணீர் முதற்கட்டமாக வைத்திசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு, ஆய்வுகூடம் மற்றும் சமையற்கூடம் ஆகியவற்றுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

கடந்த ஒரு வாரமாக இவ்வாறு விநியோகிக்கப்படுகிறது. இந்த இயந்திரத்தின் பெறுமதி 17 லட்சம் ரூபா என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த இயந்திரமானது ஒரு நிமிடத்துக்கு 13 லீற்றர் நீரைச் சுத்திகரிப்பதாகவும் நாளடைவில் வைத்தியசாலையின் ஏனைய பகுதிகளுக்கும் சுத்திகரிக்கப்பட்ட நீர் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (10-6-15)

# டொல்பினை விற்கமுற்பட்டவர் யாழ். நீதிமன்றில் ஆஜர்

ஊர்காவற்றுறை,ஒக்.15

எழுவைதீவுக் கடற்பிரதேசத்தில் மீனவர் ஒருவரால் பிடிக்கப்பட்ட 'டொல்பின்' விற்பனைக்காக எடுத்துச்சென்றபோது வழியில் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடந்த 11ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில் குறிப்பிட்ட மீனவரும் டொல்பினை ஏற்றிவந்த வாகனச் சாரதியும் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

மனிதனுக்கு தீங்கு விளைவிக்காததும் கடலில் மனிதனுடைய உற்ற நண்பனாகவும் கருதப்படும் இந்த டொல்பினைப் பிடிப்பதற்கு சர்வதேச ரீதியில் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (10-16-202)

## உதயவாக்கு

முன்நோக்கிப் பார்ப்பது நல்லது தான். ஆனால், எட்டாத தூரத்துக்கு அப்பாலும் பார்க்க முனைவது முட்டாள் தனம்

## ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்
## தற்காலிக கிளை முகாமையாளர் பதவி விண்ணப்பம்

ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கத்தில் தற்காலிகக் கிளை முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஊர்காவற்றுறையில் உள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பதாரர் க.பொ.த. (சா/த) இல் கணிதம், தமிழ் உட்பட சித்தியடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்பங்களை 27.10.2004 ஆம் திகதிக்கு முன்னர் பொது முகாமையாளர், ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம், ஊர்காவற்றுறை என்னும் முகவரிக்கு நேரிலோ, பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்கலாம்.

**பொது முகாமையாளர்,**
**ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்.**

(C/38199)(43-19-16-24)



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ 09 - 12 - 1968



கண் நெகிழ 15 - 10 - 2002

திருமதி **யூட்சூரியஜீவன் குகானந்தி**
(ஆனந்தி)
திதி: 23.10.2004

எம் கண்களின் ஒளியென நிறைந்தாய்
கண்மணி ஏன் எமை மறந்தாய்
உன் நினைவுகள் நெஞ்சினில் மோதும்
எம் விழி இனி எங்கனம் உறங்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
**அம்மா, அப்பா, சகோதரர்கள், உறவினர்கள்.**

*இல.11, 3ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.*

(37592) (24-19-16)


## குழிக்குள் தவறி வீழ்ந்து வயோதிபர் மரணம்

தென்மராட்சி,ஒக்.15

பனை அடிமரத்தை வெளியே எடுப்பதற்காக வெட்டப்பட்ட குழிக்குள் தவறி வீழ்ந்து வயோதிபர் ஒருவர் பலியானார்.

கடந்த 12ஆம் திகதி சாவகச்சேரி சப்பச்சி மாவடியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சதாசிவம் (வயது 84) என்பவரே பலியானவராவார்.

சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் சு.கந்தசாமி சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டு சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைச் சட்ட வைத்திய அதிகாரி மூலம் பிரேத பரிசோதனை நடத்தி எதிர்வரும் 18ஆம் திகதி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலீஸாரைப் பணித்தார். (4-117)

## பாம்பு தீண்டியது

யாழ்ப்பாணம்,ஒக்.15

சைக்கிளில் செல்வதற்காக ஏறி அமர்ந்தவரை 'செயின் கவரி'னுள் இருந்து வெளிவந்த பாம்பு காலில் தீண்டியது.

வேலணை, சரவணையில் இடம்பெற்ற இச்சமபவத்தில் கிருஷ்ணசாமி லாவண்யா (வயது 14) என்ற சிறுமிக்கே பாம்பு தீண்டியது.

அதிகளவில் விஷமேறிச் சோர்வடைந்த நிலையில் இவர் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேபோல கடந்த இருவாரங்களுக்கு முன்பு கொழும்புத்துறையிலும் ஒரு சம்பவம் இடம்பெற்றது.

சைக்கிளை ஓடமுற்பட்டவேளை சைக்கிள் சில்லுக்குள் சுற்றிக்கொண்டிருந்த பாம்பு வாரித்தம்பி (வயது 60) என்பரைக் கடித்தது குறிப்பிடத்தக்கது. (10-15)

## புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.15

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஐந்தாந்தரப் புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளில் அதிபர்கள் மூலம் பெறப்பட்ட மேலும் சில பாடசாலைகளின் பெறுபேறுகள் வருமாறு:-

- பருத்தித்துறை மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தியாலம். சித்தியடைந்தோர் - 07பேர்.
  தி.சுதாகரன் (163), அ.ஜெயாஸ்வரன் (154), ஸ்ரீ.தினேஸ் (153), சு.சுஜீவன் (140), ஆ.நிதர்சன் (140), ம.மிக்ஸ்மணன் (140), சி.சுலோசினி (131).
- சுன்னாகம் றோ.க.த.க. பாடசாலையில் சித்தியடைந்தவர் ப.விகிர்தனன் (136).

(10-70-203)





வந்து பாருங்கள் பல புதிய முறைகளைக் கண்டு வியப்பீர்கள்
**முற்றிலும் இலவசம்**

இடம் : யாழ். மத்திய கல்லூரி
திகதி : 16.10.2004 மற்றும் 17.10.2004
காலம் : காலை 09.30 முதல் மாலை 04.30 வரை

கழிவு விலையில் சமையலறைப் பொருள்கள் மற்றும் உபகரணங்கள் கொள் முதல் செய்வோருக்கான அதிர்ஷ்டச் சீட்டிழுப்பும் உண்டு.

**SINGER®**
**AT HOME WORLDWIDE**

மேலதிக விவரங்களுக்கு:-
**சிங்கர் காட்சியறை**
இல.01, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். Tel: 222 5408

(C/38120) UTHAYAN Graphics


## பரிசளிப்பு விழா

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் சு.புண்ணியசீலன் தலைமையில் இடம்பெறும் இவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனும், சிறப்பு விருந்தினராகத் தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சகைலாசநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (10-202)


## இன்று சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம்
### இத்தினத்தில்.
## வாழ்வகத்தின் வாழ்த்துச் செய்தி

வெள்ளைப்பிரம்பு என்பது கண் பார்வையற்றவர்கள் சுயமாக நடமாடுவதற்கு உதவுகின்ற ஒரு சாதனமாகும். 1931இல் அமெரிக்கா இலினோய் மாவட்டத்திலுள்ள பியோரியா என்னுமிடத்திலுள்ள அரிமாக் கழகத்தினரின் முயற்சியால் இவ்வெள்ளைப்பிரம்பு பார்வையற்றவர்களின் அடையாளச் சின்னமாகச் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டது. 1969 இல் ஆண்டுதோறும் ஒக்டோபர் 15ஆம் திகதியை சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினமாகக் கொண்டாடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இன்றைய தினத்தில் உலகெங்கிலுமுள்ள அரிமாக் கழகங்களுக்குத் தன் உளமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகின்றது. அத்தோடு, அகில உலகிலுமுள்ள பார்வையற்ற, பார்வைக் குறைபாடுடைய உடன்பிறப்புகள் அனைவருக்கும் தன் உளமார்ந்த வாழ்த்துக்களை உரித்தாக்குவதில் வாழ்வகம் உவகையடைகிறது.

*வாழ்வகம், சுன்னாகம்.* - வாழ்வக சமூகம்.

(37574)(42-19-16-24)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 23 * 03 * 1916



உதிர்வு 17 * 09 * 2004

திருமதி **சிவயோகமலர் இரத்தினம்**

*அம்மாவே தெய்வம் என்றும் அவர் திருவடி தொழுவோம்*
*என்றென்றும் அவர் நினைவோடு வாழ்வோம்; மறவோம்.*

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் பல வழிகளிலும் எமக்கு உதவி ஒத்தாசை புரிந்து அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எதிர்வரும் 17.10.2004 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் ("சுகீர்தமஹால்", முதலாம் கட்டை, உடுவில) நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறுகின்ற நண்பகல் மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"சுகிர்த மஹால்", முதலாம் கட்டை, உடுவில்.*
**T.P.: 077 6144973**
**021 4591734**

R.சர்ம்பசிவம் Rtd. Bank Manager,
Dr.R.பரமதாசன் U.K.,
Eng. R.மகாதேவன்,
Accountant R.விமலேந்திரன் U.K.,
திருமதி இந்திராணி ஜெயபதி (Accountant - Canada).

(37573) [illegible] 16)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 01 1927



மறைவு 27 09 2003

அமரர் **திருமதி மாரிமுத்து ஆறுமுகம்**
(நாகர்கோவில் கிழக்கு)

திதி: 15.10.2004

அன்புத் தெய்வமே! பண்பின் திருவுருவாய் பாசத்தின்
பிறப்பிடமாய் எம்மை ஆளாக்கி ஆறாத்துயரில்
ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்டு இன்றுடன்
ஆண்டு ஒன்று சென்றாலும் என்றென்றும் உங்கள்
பாசவிளக்கின் ஒளி அணையாத தீபமாய் பிரகாசித்துக்
கொண்டிருக்கும் எங்கள் நெஞ்சங்களில் என்றும் அழியாத
ஓவியமாய் நிறைந்திருக்கும் எங்கள் அன்புத் தாயின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து நிற்கும்........

திரு.திருமதி சுந்தரலிங்கம் தம்பசிட்டி, பருத்தித்துறை

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(37591)

# "....தன்னைத் தானே ஆய்வு செய்து பெண்கள் முன்னேற வேண்டும்...."

எங்களைப் பற்றி நாங்களே முதலில் ஆய்வு செய்யவேண்டும் என்கின்றார் அமெரிக்காவில் வசிக்கும் பெண் உரிமைவாதியான திருமதி சுசீலா ராஜா.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவர், வெளி நாடுகளில் பெண்கள் மேம்பாடு தொடர்பான தளங்களில் நீண்டகாலம் பணியாற்றியவர். அத னூடு நிறைந்த அனுபவங்களைப் பெற்றவர்.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்தி ருந்த அவரை நல்லூரில் உள்ள இல்லத்தில் சந்தித்துத் 'திலகம்' பகுதிக்காகக் கருத்துக் கேட்டோம்.

அவர் கூறினார்.....

எனது சொந்த இடம் யாழ்ப்பாணம். ஆனா லும், 35 வருடங்கக்கு மேல் பிரித்தானியாவில் வசித்து வருகிறேன். சமூகவியல் M.A.பட்டம் பெற்ற நான், மனித உரிமைகளுக்கும் அபிவி ருத்திக்குமான நிலையத்தின் (CHARD) ஆலோசகராக இருக்கிறேன்.

பெண்களுக்கு எதிரான, அநீதியான அடக்கு முறைகளுக்கெதிராகப் போராடிப் பெண்கள் தமது உரிமைகளைப் பெறவேண்டும்.

இவர்கள் பண்பாடு, தேவைகள், வளர்ச்சி என்பன பற்றி எழுதுவது இற்றைவரைக்கும் மிகக்குறைவாகவே காணப்படுகிறது. இந்நிலை மாற்றியமைக்கப்படவேண்டும் - என்ற சிந் தனை என்னைப் பெண்கள் சம்பந்தமான களப் பயிற்சிகளிலும், ஆய்வுகளிலும் ஈடுபட வைத்தது.

இந்நிலைமை, பல்வேறு நாட்டுப் பெண்களு டனும் கலந்து பழகி வேலைசெய்யும் சந்தர்ப் பத்தை ஏற்படுத்தியது.

பெண்கள் தொடர்பான துறைகளின் முன் னேற்றத்துக்குத் தடைகள் என்னவென்று என்னை நானே கேள்வி கேட்டு பெண்ணியம் சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொண்டேன்.

### முயற்சிகள் வளரவேண்டும்

பெண்களிடம் திறமை, பலம், துணிவு என்பன நிறைவாகவே காணப்படுகின்றன. ஆனால், அவர்கள்தான் அதனைச் சரியாக வெளிக்காட்டுவதில்லை. ஒரு சமயத்தில், வெள்ளை, கறுப்பு இனத்தவர்களோடு பயிற் சிப் பட்டறை நடத்த சந்தர்ப்பம் கிடைத்தது.



ஆனால், அதற்கான போதிய திட்டங்களோ, ஒழுங்குபடுத்தல்களோ எதுவும் இல்லை,

> "எங்களது பெண்கள் நாடாளு மனறம் செல்ல 50 வருடங்கள் தேவை பட்டுள்ளது......"

தெளிவுபடுத்திக் கொள்வதற்கான, ஒரு வினாவை அதற்குப் பொறுப்பானவரிடம் கேட் டேன், உடனே கோபத்தோடு 'புதிதாக உரு வாக்கிக்கொண்டு வாரும்' என்று கூறிவிட்டார். என்னால் முடியும் என்ற நம்பிக்கையுடன் வேலை செய்தேன்; வெற்றியடைந்தேன். புதிய திட்டமிட்டல்களை முன்வைத்தேன். எனக்கே ஆச்சரியம். எனக்குள் இப்படித் திறமைகள் உண்டா? என. ஒவ்வொருவருக்குள்ளும் உள்ள திறமைகளை இனங்கண்டு திட்டமிட்டுச் செயற் படுவோமானால், வெற்றி நிச்சயம் என்பதை நானே அனுபவத்தில் உணர்ந்தேன்.

### பெண்கள் சந்திப்பது

எங்கள் சமூகம், வெளிநாட்டைப் பொறுத்த வரை இரண்டாகப் பிரிந்து செல்கிறது. முன் னைய மக்கள் தமது நிலைகளை உணர்ந்து புதிய உத்திகளில் தமது பிள்ளைகளைக் காலத்திற்கேற்ப விட்டுக்கொடுத்து வளர்க்கிறார் கள். இத்தகைய குடும்பப் பிள்ளைகள், தமது பிரச்சினைகளைத் தாமே தீர்த்துக்கொள்கிறார் கள். பின்னர் உள்ளர்வர்கள், எதனோடும் ஒட் டாது பிரச்சனைகளைத் தினம் சந்தித்துப் புதிய கலை, கலாசரத்தை ஏற்பதா? விடுவதா? எனச் சிக்கல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தன்னிச்சையான முடிவுகளால் எத்தனையோ பெண்கள் வாழ்வைத் தொலைத்துள்ளார்கள். அங்கும் அனாதை இல்லங்கள் தொடங்கப்பட் டுள்ளன.

எமது அரசும், வேலை வாய்ப்பிற்காகச் செல்லும் பெண்களுக்குப் போதிய திட்டமிடல், வழிகாட்டல், பாதுகாப்பு, பயிற்சி, விளக்கம், விழிப்புணர்வு என்பனவற்றை வழங்காது வெளி யேற விடுகின்றனர். இத்தகைய சந்தர்ப்பங் களில் வெளிநாடுகளில் 'பணம்' ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செல்பவர் கள், ஈற்றில் பெற்றார், உற்றார், உறவினர்களால் புறக்கணிக்கப்படும் நிலையில் கலங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆதலால், பெண்களுக்கான போதிய பொருளாதாரப் பாதுகாப்புகளை அரசு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

### மாற்றம் வேண்டும்

ஆனாலும், யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரை இன்னும் எங்கள் தமிழ்ப் பெண்கள் மாறவில்லை. அன்றைய சமூகக் கட்டுக் குள், வார்த்தபடியே, இன்றும் இருக்கிறார் கள். ஒரு சிலர் வெளி வந்து போராடி வெற்றி பெற்றுள்ளார்கள் தான. ஆனால், சமூகம் கொடுத்த மகள், தாய், மனைவி என்பன போன்ற பாத்திரங்களுக்குள் சிக்கி கட்டுப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

எங்கள் பெண்களை நாடாளுமன்றம் அனுப்ப 50 வருடங்கள் தேவைப்பட்டுள்ளது என்றால், எங்கள் பெண்களின் வளர்ச்சி எந்நிலையில் உள்ளதென்பதைக் காணமுடியும். மேற்குலக நாடுகளைப் பொறுத்தவரை பெண்களுக்குப் போதிய சுதந்திரம் உண்டு. ஆனால், எங்கள் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை பெண்க ளுக்குச் சகலதுறைகளிலும் அனுமதி கிடைத் திருக்கிறதே தவிர, பெரிய புரட்சி என்று சொல் லுமளவிற்குப் பங்களிப்பு இல்லையென்றே கூறவேண்டும்.

### வாழப் பிறந்தவர்கள்

பெண்கள் உரிமைகளை அனுபவிக்க உரிததுடையவர்கள், ஆனால் சமூக வரையறை களுக்குப்பின்னால் அடங்கிப்போய் நாமே எமக்கு விலங்குகளைப் பூட்டிக்கொள்கிறோம். அடக்குமுறைக்கு ஆதரவாக இருக்கிறோம் இந நிலைமாறி எமக்குள் நாமே மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும். எங்கு எமக்கெதிராக வன்முறைகளும் அநீதிகளும் நடக்கின்றதோ அங்கு நாமே எமக்குரிய நியாயத்தைத் தட் டிக்கேட்க முன்வரவேண்டும்.

பெண்களைப் பொறுத்தவரை பலரிடமி ருந்து பல இடங்களிலிருந்து பிரச்சனைகள்

**மதியழகி - கங்கா**

வந்துகொண்டே இருக்கும். பிரச்சினைகள் ஒன்று தான், ஆனால் சந்திக்கின்ற சந்தர்ப்பங்கள் தான் வேறு.

பிரச்சினைகளைக் களையாது வளரவிட் டால் நாளடைவில் எம்மையே அது அழித்து விடும், இந்நிலையை மாற்றியமைக்க முன்வர வேணடும். பெண்கள் ஒவ்வொருவரும் சுயாதீன மாக தன்னம்பிக்கையுடன் செயற்பட வழிகாட்ட வேண்டும்.

### வாழ்வில் வெற்றிபெற....

காலத்திற்கேற்ப எம்மை நாமே வளர்த்து, மாற்றிக்கொள்ளவேண்டும். பிரச்சினைகளைத் தட்டிக்கேட்டுத் தவறு செய்பவர்களுக்குத் தண்டனை பெற்றுக்கொடுக்கவேண்டும். எமக் கான பாதுகாப்பை நாமே பொருளாதார ரீதி யாக உறுதிசெய்யவேண்டும், சுயதொழில் களில் ஈடுபட்டு, நல்லமுறையில் வருமானத்தை ஈட்டிக்கொள்வதன் மூலம், 'தங்கிவாழ்தலை' நீக்கிக்கொள்ளலாம். இதன்மூலம், சுதந்திர மான, சுயாதீனமான செயற்பாட்டுக்கு வழி வகுக்கமுடியும்.




அன்பாக, மனித நேயத்துடன் அரவணைக் கும் பிரஜையாக இருக்கவேண்டும். பிரச்சினை களை வெற்றிகொண்டு வாழ்வில் பெண்கள் முன்னேறவேண்டும். முயற்சி உடையவர்க்கு வெற்றிகள் கூப்பிடு தூரம். ☆

---

## சந்தியாவின் கடிதங்கள்



*பிரியமுள்ள பிரியாவிற்கு...*

நான் சொல்லும் கருத்துக்கள் உனக்கு ஏற்பு டையதோ? இல்லையோ? தெரியவில்லை. ஆனா லும் நான் எனக்குத் தெரிந்த (சிலவாயினும்) கருத் துக்களைச் சொல்லத் தயங்குவதில்லை.

இன்று நான் 'கோபத்தின் விளைவு' பற்றி எழுது கின்றேன்.

கோபமானது பல காரணங்களால் ஏற்படுகின்றது. சில சமயம் நமக்கு வேண்டிய ஏதாவது ஒரு பொருள் காணமாற்போனால் நம்மை மீறிய சினம் ஏற்பட்டு நாம் வேதனைப்படுவதோடு மற்றவர்களையும் வேதனைப்படுத்தி விடுகின்றோம்.

அண்மையில் எனது உறவினர் வீட்டுத் திருமணம் ஒன்றிற்குச் சென்றிருந்தேன். மணப்பெண் ஆயத்தத்தின்போது அவரது முத்துமாலை ஒன்று காணாமற்போய் விட்டது. உடனே பெண்ணின் தாயார் தம் வீட்டு வேலைக்காரர். சமையல்காரர் என்று எல்லோரையும் மிரட்டிச் சோதனையிட்டார். அவரது சில உறவினர்கள் கொஞ்சம் ஏழையாயிருந்த உறவினர் பெட்டியையெல்லாம் சோதனையிட்டார்கள். பொலீஸுக்கும் தகவல் கொடுத்துவிட்டார்கள்.

முகூர்த்தநேரம் வந்ததால் மணப்பெண்ணிற்கு மீண்டும் உடையைச் சீர்படுத்தி னார்கள். அவரது புடைவை மடிப்பை எடுப்பதற்காகக் குனிந்த பெண்ணின் கண் களில் கட்டிலுக்கு அடியில் பு,னையெனப் பதிங்கியிருந்த முத்துமாலை தெரிந்தது.

மணப்பெண்ணின் தாயார் தம் கோபத்தை அடக்கி நிதானமாகத் தேடியிருந்தால் முத்துமாலை கிடைத்திருக்கும். கோபத்தில் தம் வீட்டு வேலைக்காரர்கள். உறவினர் கள் என அனைவருக்கும் மனஸ்தாபத்தை ஏற்படுத்திவிட்டார். பதட்டமாகப் பேசுவ தும். நடந்துகொள்வதும் பிற்பாடு மனவருத்தத்தையே ஏற்படுத்தும்.

சில வீடுகளில் விருந்தினர் யாராவது வந்திருக்கும் சமயம் பிள்ளைகள் அதைப் பற்றி அறியாமல் தமது இயல்புக்கேற்ப குழப்படிகளைச் செய்வார்கள். உடனே பெற்றோர் அந்தப் பிள்ளைகளுக்கு நன்றாக முதுகில் வைப்பார்கள். வந்திருக்கும் விருந்தினர்களுக்குத் தம் முதுகிலேயே அடி விழுந்ததான உணர்வுதான் ஏற்படும்.

என்னுடன் வேலை செய்யும் ஒரு தோழி தன்னுடைய கோபத்தைப் பற்றிக்கூடப் பெருமையாகப் பேசுவாள். 'நன்றாக டோஸ் கொடுத்திட்டன்'. 'சுடச்சுடக் கேட்டு விட்டேன்', 'ஒரு விளாசு விளாசிவிட்டன்' என்று பிரலாபத்தை அடுக்குவாள். தான் விளாசியதாலும், டோஸ் விட்டதாலும் ஏதாவது பயனுண்டா என்று சிறிதேனும் அவள் சிந்திப்பதில்லை. இதனால் விபரீத பலன்தான் ஏற்படும்.

நம்மால் கோபத்தை முழுமையாக வென்றுவிட முடியாது. இதனால்தான் நமது பொய்யாமொழிப் புலவர் வள்ளுவர் "தீயினால் சுட்ட புண் உள் ஆறும். ஆறாதே நாவினால் சுட்ட வடு" என்று கூறியிருக்கிறார். அனுபவமுள்ள பெரியார் ஒருவர் தமது உரையில் - "நாக்கில் வரும் சுடுசொற்களைச் சொல்லாமல் சற்றுநேரம் வைத்துக்கொள். சிறிது நேரத்திலேயே அவை ஆறிக் குளிர்ந்துவிடும். உனக்குக் கோபம் வரும் போதெல்லாம் ஒன்று இரண்டு என நூறு வரை எண்ணு" என்று கூறியிருக்கிறார். இது அவர் அனுபவத்தில் கண்ட உண்மைபோலும்.

நாமும் நமது கோபத்தை அடக்க முயற்சி செய்வோம். நமக்குக் கோபம் ஏற் படும்போது சிறிதுநேரம் கண்களை மூடி இறை நாமத்தை மீண்டும் மீண்டும் உச் சரிததால் கோபம் குறைவதை உணரலாம். நல்ல இசையை கேட்டல். அழகிய காட்சி களைப் பார்த்தல். நமது புலன்களை வேறுவழிகளில் ஈடுபடுத்தல் என்பவை நமது கோபத்தைக் கட்டுப்படுத்தக்கூடும்.

சிலர் கோபம் ஏற்படும்போது அதை வெளிப்படுத்தாமல் தடுப்பதற்காக தமது உடலைக் குத்திப் புண்ணாக்குவார்கள். இது தவறான செயலாகும். முயற்சியினால் முடியாதது எதுவுமில்லை. வாழ்க்கையில் கூடிய வரை சாந்தத்துடன் இருக்கவும் இனிமையாகப் பழகவும் பயிலவேண்டும்

*பிரியமுடன் சந்தியா*

15-10-2004

---

## சாதனையில் வேறுபாடு இல்லை!



சாதனை என்பது இன, மத, மொழி, பால் வேறுபாடு அனைத்தையும் கடநதது என்பதற்கு இலக்கணமாக இன்றைய இப்பகுதியை அலங்கா!க்கிறார் கறுப்பி னத்தவரான 'டோனி மார்! சன்'.

பல தாக்கங்களால் உந்தப்பட்டு, பல இலக் கியங்கள் புனைந்து 1993 ஆம் ஆண்டுக்கான இலக்கிய நோபல் பரிசை வென்றவர் இவரே.

ஸ்வீடிஷ் அக்கடமி, 1993 இற்கான இலக் கிய நோபல் பரிசு இவருக்கு வழங்கப்பட வுள்ளதாக அறிவித்தவுடன் ஆச்சரியப்பட்ட வர்களில் முதலிடம் வகிப்பவரும் இவரே என்பது இன்னும் ஆச்சரியமான விடயம். ஏனெ னில், இப்பரிசு 'தோமஸ் பின்சன்' என்ற எழுத் தாளருக்கோ அல்லது 'ஜோய்ஸ் காரல்' என்ற பெண்மணிக்கோ தான் கிடைக்கும் என எதிர் பார்க்கப்பட்டது. இவருக்குக் கிடைக்கும் என்ற ஊகம் எள்ளளவும் இருக்கவில்லை என்பதே உண்மை.

அமெரிக்காவில் 1931 இல் குத்தகை விவ சாயி ஒருவரின் 2 ஆவது மகளாகப் பிறந்த இவர், இளம்வயதிலேயே அனுபவித்த இனக் கொடுமையே இந்தச் சாதனையைப் புரிவதற்கு இவருக்குக் களம் அமைத்துக்கொடுத்தது. இவரால் படைக்கப்பட்ட அனைத்து நாவல்க ளுமே அமெரிக்காவில் நீக்ரோவாக வாழ இருப்ப தற்கான சூழ்நிலையில் ஏற்படும் வரலாற்று ரீதியான சமூக இறுக்கங்கள், நசுக்கங்களை மையக்கருவாகக் கொண்டவை.

குடியிருந்த தமது வீட்டிற்கு நான்கு டொலர் வாடகை கடன் என்பதற்காகத் தமது குடும்பத் தினரை உள்ளே வைத்து வீட்டையே கொளுதத முயற்சித்த வெள்ளை இனத்தின் அராஜ கத்தை இவர் இளம் வயதிலேயே அனுபவித் தார். இச்சிறு விடயத்திற்காகத் தமது வீட் டையே கொளுத்த நினைத்த அந்த வெள் ளையரின் 'இனவெறி' அவரது உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தது.

ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் உயர் படிப்புப் படித்த டோனி 'வில்லியம் ஃபாக்னர்' 'வர்ஜீனியா உல்ஃப்' ஆகியோரின் படைப்பு களில் உள்ள தற்கொலை மனோபாவம் பற் றிய ஒரு ஆய்வுக் கட்டுரையை எழுதி எம்.ஏ. பட்டம் பெற்றார். அதனைத் தொடர்ந்து இவ ரது எழுத்தாற்றல் மேலும் வளர்ந்தது. இதற்க மைய 1970 இல் 'நீலக்கண்கள்' என்ற முதல் நாவலை இவர் எழுதினார்.

நியூயோர்க்கில் 'ரண்டம் ஹவுஸ்' என்ற பதிப்பாளரிடம் எடிட்டராகப் பணியாற்றிய டோனி பதிப்புத்துறையில் மகத்தான வெற்றி பெற்றார்.

இவரது 'பி லவ்ட்' என்ற நாவல் 'புலிட்சர்' பரிசு பெற்றது. இவர் தமது எழுத்தாற்றல் ஊடாக நோபல் பரிசு பெற்றுக்கொண்டதன் மூலம் இலக்கியம் என்பது இனம், பால், மொழி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது என்பதைக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

"ஆம்! எதனையும் துணிவுடன் எதிர் கொண்டு முயற்சியுடன் செயற்படுத்தினால் வெற்றி நிச்சயம்" **சாம்பவி.**

---

## இந்த நிலத்தினது பெண்கள் நாள்



ஒக்ரோபர் பத்து!
நிலத்தினது நிம்மதிக்காய்
முதல் பெண்....
இன்றோவெனில்
இந்த நிலத்தினது
பெண்கள் நாளாகியே
புன்னகைத்து நிற்கிறது

இந்தப் பெண்கள்
அடுக்களைகளுக்காய் மட்டுமல்ல
அக்கிரமங்களைச் சாடுதற்காய்
ஆளுமைகளில் சிறந்தோராய்,
நாட்டினது சிற்பிகளாய்,
நலங்கள் பெருக்குதற்காய்,
என்றெழுந்த நாள்

வள வள வார்த்தைகளை
வறுமையுற வைத்தே
பொன்னிலும் பெறுமதிமிகு
நேரத்தை நிலத்தினது
வளப்படுத்தலுக்காய் என்போம்
இன்றைய நாள் எப்போதும்
பெருமைமிகு நாளாகட்டும்.

- மீசாலையூர் கமலா.

# கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரணதரம்) மாதிரி வினாத்தாள்

# விஞ்ஞானமும் தொழினுட்பவியலும் பகுதி I

உதயன் ஜீ.சீ.ஈ. (சா)தரம் மாதிரி பரீட்சைகள் இல.10

ஒரு மணித்தியாலம்

தொகுப்பு : சுப்பிரமணியம் சிவநேசராசன்

**1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் சரியானது அல்லது மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க**

01) ஞாயிற்றுத்தொகுதியில் அண்மையில் கண்டறியப்பட்ட பத்தாவது கோள்
1) ஸ்பிறிற் 2) ஒப்பயுனிற்றி 3) செட்னா 4) பாத்பைன்டர்

02) மெகா ஹேட்ஸ் (MHz) என்பது எதனை அளக்கும் அலகு ஆகும்.
1) ஒலி அலையின் அலைநீளம் 2) ஒலியின் மீடிறன்
3) ஒலிச்சக்தி 4) ஒலி அலையின் வீச்சு

03) பச்சைத் தாவரங்கள் சுவாசச் செயன்முறையின் போது உள்ளெடுக்கும் வாயு எது?
1) காபனீரொட்சைட் வாயு 2) ஒட்சிசன் வாயு 3) நீராவி 4)மேற்கூறிய யாவும் பிழை

04) விபத்துக்கள் போன்ற ஆபத்து வேளைகளில் ஒருவர் பயப்பிடும்போது இதயம் கூடுதலாக துடிப்பதுடன் வியர்தலும் கூடுதலாக நடைபெறும். இச்செயற்பாட்டுக்குக் காரணமான ஓமோன்
1) இன்சுலின் 2) அதிரினலின் 3) தைரொட்சின் 4) ஈஸ்ரஜன்

05) பின்வரும் எந்த அணுஎண் உடைய மூலகத்தின் வலுவளவு 2 ஆக அமையாது?
1) 12 2) 16 3) 8 4) 2

06) மின் அடுப்புக்களின் வெப்பச்சுருள்களைத் தயாரிப்பதற்குப் பயன்படும் நிக்குரோம் கலப்பு லோகத்தில் காணப்படுகின்ற உலோகத்தின் குறியீடு அல்லாதது எது?
1) Ni 2) Fe 3) Cu 4) Cr

07) வாகனங்களின் பிற்பக்கப்பார்வை ஆடியாகப் பயன்படுத்தும் ஆடி
1) தளஆடி 2) குவிவு ஆடி 3) குழிவு ஆடி 4) மேற்கூறியன யாவும் சரி

08) உயிரினங்களின் கூர்புக் கொள்கையின் தந்தை எனப் போற்றப்படுபவர்
1) மென்டல் 2) சார்ள்ஸ் டார்வின் 3) நியூட்டன் 4) டால்ற்றன்

09) இரும்பு உலோகத்தைக் கொண்ட தாதுப்பொருள் அல்லாதது எது?
1) ஏமற்றைற் 2) மக்னற்றைற் 3) இல்மனைற் 4) டொலமைற்


10) செப்புசல்பேற் கரைசலின் நிறம்
1) நீலம் 2) பச்சை 3) சிவப்பு 4) மெல்லிய நீலம்

11) நிலைபேறான புல்லியைக் கொண்ட பழத்தை உருவாக்கும் தாவரம்
1) வாழை 2) கத்தரி 3) மிளகாய் 4) விடைகள் 2 உம் 3உம் சரி

12) உடற்சமநிலையுடன் தொடர்புடைய மூளையின் பகுதி
1) மூளி 2) மூளையம் 3) நீள்வளையமையவிழையம் 4) நரம்பு

13) நிறமுள்ள வாயு எது?
1) ஒட்சிசன் வாயு 2) குளோரின் வாயு 3) காபநீரொட்சைட் வாயு 4) ஐதரசன் வாயு

14) 750g திணிவுள்ள விளையாட்டுக் கார் ஒன்றை $4ms^{-2}$ ஆர்முடுகலுடன் இயங்கச் செய்வதற்கு பிரயோகிக்க வேண்டிய விசை நியூட்டனில்
1) 750 X 4 N 2) $\frac{750}{1000}$ X 4N 3) $\frac{750\ N}{4}$ 4) $\frac{4\ N}{750}$

16)



AB = 8cm ஆயின் மேற்படி ஒலி அலையின் அலைநீளம்
1) 32 cm 2) 0.016 m 3) 0.32 m 4) 4cm

16) அணு எண் 16 ஆக உடைய மூலகம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் பிழையானது எது?
1) ஆவர்த்தன அட்டவணையில் 3ஆம் ஆவர்த்தனத்திலும் 6ஆம் கூட்டத்திலும் காணப்படும்.
2) +2 ஏற்றமுடைய நேரயனை உருவாக்கும் 3) வலுவளவு 2 ஆகும்
4) இலத்திரன் நிலையமைப்பு 2,8,6 ஆகும்

17) ஒட்சிசன் செறிவு கூடிய குருதியைக்கொண்டு செல்லும் குருதிக் கலன்
1) நுரையீரல் நாளம் 2) முன்பெருநாளம் 3) நுரையீரல் நாடி 4) ஈரல் வாயிநாளம்

18) மண்ணில் இருந்து நீரையும் கனியுப்புக்களையும் உறிஞ்சும் தாவரத்தின் பகுதி
1) வேர் 2) தண்டு 3) இலை 4) வேர்மயிர்

19) 9W தடைப் பெறுமானம் உள்ள கடத்தி ஒன்றுக்கு குறுக்கே 126V மின் அழுத்த வித்தியாசத்தைப் பிரயோகிக்கும் போது கடத்தியின் ஊடாக பாயும் மின்னோட்டம்
1) 108A 2) 3A 3) 0.75A 4) 14A

20) பின்வரும் கூற்றுக்களின் பிழையானது எது?
1) மனிதனின் குருதியின் அமினோ அமில அளவைச் சீராக்கும் அங்கம் ஈரல் ஆகும்.
2) ஈர்க்கப்பட்ட இறப்பர் நாடாவில் அழுத்தசக்தி காணப்படுகின்றது
3) தாவரங்கள் மண்ணில் இருந்து கனியுப்புக்களை உறிஞ்சும் செயற்பாடு உயிர்ப்பான அகத்துறிஞ்சல் ஆகும்.
4) தும்புத்தடியினால் தரையைக் கூட்டும் செயற்பாடு இரண்டாம் வகை நெம்புகோல் பொறி ஆகும்.

21) 75W வலுவுள்ள மின்குமிழ் ஒன்று 10 நிமிடங்களுக்கு ஒளிரும்போது பயன்படுத்தப்படும் மின்சக்தி
1) 75 X 10 யூல்
2) $\frac{75}{10}$ யூல்
3) 75 X 10 X 60 யூல்
4) 75 X 60 யூல்

22) 30°c இல் உள்ள 250 g நீரின் வெப்ப நிலையை 50° C ஆக உயர்த்துவதற்கு வழங்கப்பட வேண்டிய வெப்பசக்தியின் பெறுமானம்
(நீரின் தன் வெப்பக் கொள்ளளவு 420J Kg -1 °C -1
1) 250 X 4200 X 20 யூல் 2) $\frac{250}{1000}$ X 4200 X 50 யூல்
3) $\frac{250}{1000}$ X 4200 X 20 யூல் 4) 250 X 4200 X 80 யூல்

23) குளோரின் மூலகத்தைக் கொண்ட செயற்கைப் பிரதியீட்டுப் பொருள்
1) பொலித்தீன் 2) பிளாஸ்ரிக் 3) P.V.C குழாய் 4) பொலியெஸ்ரர்

24) அணுஎண் 13 ஆக உடைய மூலகம் xஉம் அணு எண் 8 ஆக உடைய மூலகம் yஉம் சேர்ந்து உருவாக்கும் சேர்வையின் மூலக் கூற்றுச் சூத்திரம் ஆக அமையக் கூடியது
1) XY 2) YX 3) $XY_2$ 4) $X_2Y_3$

25) $Ca\ Co_3$ ® $Ca0 + Co_2$
(Ca = 40 C=12 O=16)
8Kg $CaCo_3$ ஐ முற்றாக வெப்பமேற்றும் போது பெறக் கூடிய Ca0இன் திணிவு
1) 4480 g 2) 5680 g 3) 44.8 Kg 4) 5.6 Kg

26) மூலகங்களின் சார் அணுத்திணிவை அளப்பதற்குப் பயன்படுத்தப்படும் நிமய மூலகம்
1) $_1H^1$ 2) $_6C^{12}$ 3) $_6C^{14}$ 4) $_8O^{16}$

27) பின்வருவனவற்றுள் செதில் இலைகளைக் கொண்டிருக்கும் தாவரம்
1) கற்றாளை 2) எருக்கலை 3) அலரி 4) சவுக்கு

28) $Ca_3(Po_4)_2$ என்ற சேர்வையின் சார் மூலக் கூற்றுத்திணிவு
(Ca=40 P=31 O=16
1) 320 2) 450 3) 310 4) 247

29) பின்வரும் கூற்றுக்களில் உண்மை அல்லாதது எது?
1) கிலோவாற்று மாணி என்பது மின்வலுவை அளக்கும் அலகு ஆகும்
2) நிறை காவிக் கணியம் ஆகும்
3) கருக்கட்டலின் பின் பூவின் சூலகமானது பழமாக மாறுகின்றது
4) டியுறாலுஜின் என்ற கலப்புலோகத்தில் அலுமினியம் காணப்படுகின்றது.

30) யூறியா உரத்தில் மூலக் கூற்றுச் சூத்திரம் $Co(NH_2)_2$ஆகும். யூறியா உரத்தில் உள்ள N மூலகத்தின் திணிவு நூற்று வீதம் (C=12 O=16 N=14 H=1)
1) 60 2) $\frac{14}{60}$ X100 3) $\frac{28}{60}$ X 100 4) மேற்கூறியனயாவும் பிழை

31) ஒளியியல் உபகரணங்களின் உபயோகம் தொடர்பாக பின்வரும் தரவுகளில் பிழையானது எது?
1) குவிவு ஆடி - வாகனங்களின் பிற்பக்கப் பார்வை ஆடி
2) குவிவு வில்லை - நுணுக்குக் காட்டி
3) அரியம் - திருசியம்
4) குழிவுவில்லை - நீள்பார்வைக் குறைபாட்டு நிவர்த்தி

32) அனைத்தும் உண்ணி உயிரினம் எது?
1) முயல் 2) சிங்கம் 3) மனிதன் 4) யானை

33) கோதுமை மாவில் காணப்படுகின்ற மூலகங்களின் குறியீடுகள்
1) C, H, N 2) C,H,O,N 3) H,O,N 4) C,H,O

34) பின்வருவனவற்றுள் எந்த உணவு சமிபாடு அடையும்போது அமீனோ அமிலமாக மாறுகின்றது.
1) மாப்பொருள் 2) புரதம் 3) கொழுப்பு 4) விற்றமின்கள்

35) மாப்பொருள் உணவுப் பரிசோதனைக்காகப் பயன்படுத்தும் அயடின் கரைசலின் நிறம்
1) மஞ்சள் 2) ஊதா 3) கருநீலம் 4) பச்சை

36) உற்பத்தியாக்கி அல்லாதது எது?
1) குருவிச்சை 2) பனம் கற்றாளை 3) பாசிகள் 4) காளான்

37) தாக்குதிறன் மிகக் கூடிய உலோகம்
1) சோடியம் 2) கல்சியம் 3) மக்னீசியம் 4) பொற்றாசியம்

38) அப்பச்சோடாவின் விஞ்ஞானப்பெயர்
1) சோடியம் குளோரைட் 2) சோடியம் காபனேற்
3) கல்சியம் காபனேற் 4) சோடியம் இருகாபனேற்

39) யாழ்ப்பாணத்துச் சுண்ணாம்புக் கற்பாறையானது பின்வருவனவற்றுள் எந்தப் பொருளின் தயாரிப்பில் சிறந்த மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படலாம்.
1) சவர்க்காரம் 2) கண்ணாடி 3) ஓடு 4) சிமெந்து

40) செவ்வாய்க் கிரகத்துக்கு அனுப்பப்பட்ட விண்கலம் அல்லாதது எது?
1) பாதபைன்டர் 2) அப்பலோ - II 3) ஸ்பிறிற் 4) ஒப்புயுனிற்றி.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரணதரம்) மாதிரி வினாத்தாள்

## விஞ்ஞானமும் தொழினுட்பவியலும்

பகுதி II

நேரம் 3 மணித்தியாலங்கள்

### எட்டு வினாக்களுக்கும் விடை தருக

வினா 01. 1)

I) ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள கோள்களில் அண்மையில் கண்டறியப்பட்ட பத்தாவது கோள் எது?

II) இயற்கை நியதிகளுக்கு மாறாக ஆண் பெண் கலப்பின்றி விஞ்ஞானிகளால் செயற்கையான முறையில் உயிரினங்களை உருவாக்கும் முறை எவ்வாறு அழைக்கப்படும்?

III) செவ்வாய்க்கிரகத்துக்கு அனுப்பப்பட்ட இரண்டு விண்கலங்களின் பெயர் தருக?

IV) டெங்குக் காய்ச்சல் நோயைப் பரப்புகின்ற நுளம்பு இனம் எது?

V) 'பெறப்பட்ட நிர்ப்பீடனக் குறைபாட்டு நோய்' என்ற தொற்றுநோயானது சுருக்கமான முறையில் எவ்வாறு அழைக்கப்படுகின்றது.

VI) 'தூரதர்சன்' என்ற செய்மதியை விண்வெளிக்கு அனுப்பிய நாடு எது?

VII) சிமெந்து தயாரிப்பதற்கு சிறந்த மூலப்பொருளாக யாழ்.மண்ணில் காணப்படுகின்ற கனியம் எது?

VIII) வட கிழக்கு மாகாணத்தின் எந்தப் பிரதேசத்தில் பெற்றோலிய எண்ணெய் படிவுகள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது?

வினா 02.

2) விஞ்ஞான விளக்கம் தருக?

I) மண்ணெண்ணெய்க் குப்பி விளக்கின் சுவாலையை ஊதும் போதுஉடனடியாக அணைகின்றது. ஆனால் அடுப்பினுள் எரிந்து கொண்டிருக்கும் விறகின் சுவாலையை ஊதும்போது மேலும் கூடுதலாக எரிகின்றது.

II) மழை நாள்களில் மரக் கதிரையில் இருப்பதிலும் பார்க்க இரும்புக் கதிரையில் இருக்கும்போது குளிர்ச்சியானது கூடுதலாக இருக்கும்.

III) வீதியின் குறுக்கே குழந்தையொன்று ஓடுவதைக் கண்ட மினிபஸ் சாரதி உடனடியாகத் தடுப்பைப் பிரயோகித்து வாகனத்தை நிறுத்துகின்றார்.

IV) விவசாயப் பயிர்களுக்கு அமோனியா, யூறியா போன்ற செயற்கைப் பசளைகள் இடப்படும் சந்தர்ப்பங்களில் கூடுதலாக நீர்ப்பாசனம் செய்யாவிட்டால் பயிர்கள் வாடிவிடும்.

V) சினிமாத் தியேட்டர் போன்ற கலை நிகழ்வு மண்டபங்களின் உட்சுவர் ஆனது அழுத்தமானதாக இராது கரடுமுரடான தவாளிப்புக்களைக் கொண்டதாக அமைக்கப்படுகின்றது.

VI) வாகனங்களின் பிற்பக்கப் பார்வை ஆடியாகக் குவிவாடி பயன்படுத்தப்படுகின்றது.

வினா 03.

3)

கூட்டம் I

ஆவர்த்தனம்

| | I | II | III | IV | V | VI | VII | O |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | P | | | | | | | |
| 2 | | Q | | R | | S | | T |
| 3 | U | | V | | W | | X | |
| 4 | | Y | | | | | | |

ஆவர்த்தன அட்டவணையின் மாதிரி அமைப்பை மேலேயுள்ள படம் காட்டுகின்றது, மூலகங்களின் குறியீடுகள் நியமக் குறியீடுகள் அல்ல. மேற்படி குறியீடுகளை மட்டும் பயன்படுத்தி பின்வரும்வினாக்களுக்கு விடை தருக.

I) அறை வெப்பநிலையில் வாயுவாக உள்ள நான்கு மூலகங்கள் தருக

II) உலோகங்கள் மூன்று தருக

III) தாக்குதிறன் மிகக்குறைந்த மூலகம் எது?

IV) தாக்குதிறன் மிகக் கூடிய மூலகம் எது?

V) +2 ஏற்றமுடைய நேரயனை உருவாக்கக் கூடிய மூலகங்கள் இரண்டு தருக

VI) -1 ஏற்றமுடைய மறை அயனை உருவாக்கக் கூடிய மூலகம் எது?

VII) வலுவளவு 2ஆக உடைய மூலகங்கள் மூன்று எழுதுக.

VIII) மூலகங்கள் V உம் S உம் சேர்ந்து உருவாக்கும் சேர்வையின் மூலக் குற்றுச் சூத்திரம் என்ன?

வினா 04. 4)

I) பூமியில் வாழும் உயிரினங்களின் சக்தி முதல் எது?

II) பச்சைத்தாவரங்கள் சுவாசச் செயன்முறையின் போது உள்ளெடுக்கும் வாயு எது?

III) பச்சைத் தாவரங்கள் ஒளித்தொகுப்புச் செயன்முறையின் போது உள்ளெடுக்கும் வாயு எது?

IV) பச்சைத் தாவரங்களில் நிகழும் ஒளித்தொகுப்புத் தாக்கத்துக்கான சொற் சமன்பாட்டை எழுதுக?

V) இருவித்திலைத் தாவர இலையில் பச்சையவுரு மணி காணப்படுகின்ற மூன்று கலங்களைக் கூறுக.

VI) வாயுப் பரிமாற்றத்தை மேற்கொள்ளும் இலையின் பகுதி எது?


VII) தற்போசணி அல்லாத ஒரு தாவரம் கூறுக

VIII) இலைத் தொழிற்தண்டுடைய தாவரம் ஒன்று கூறுக?

IX) நன்னீர்க் குளச் சாகியத்தில் நடைபெறக் கூடிய உணவுச் சங்கிலி ஒன்று எழுதுக.

X பொதுவாகப் பூமியில் புலி, சிங்கம், கழுகு போன்ற ஊனுண்ணிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன?

வினா 5. 5)




மனிதனின் குருதிச் சுற்றோட்டத் தொகுதியின் மாதிரி அமைப்பைப் படம் விளக்குகின்றது.

I) A,B,C,D எனக் குறிக்கப்பட்டுள்ள இதயத்தின் நான்கு அறைகளையும் பெயரிடுக.

II) E தொடக்கம் N வரையான ஆங்கில எழுத்துக்களினால் குறிக்கப்பட்டுள்ள குருதிக் கலன்களைப் பெயரிடுக.

III) ஒட்சிசன் செறிவு குறைந்த குருதியைக் கடத்தும் நாடி எது?

IV) மயிர்த்துளைக் குழாயில் தொடங்கி மயிர்த்துளைக் குழாயில் முடிவடையும் நாளம் எது?

V) குருதியில் உள்ள சமிபாடு அடைந்த போசனைப் பொருள்களின் அளவைச் சீராக்கும் அங்கம் எது?


VI) மூடிய குருதிச் சுற்றோட்டம் என்றால் என்ன?

VII) குருதியில் உள்ள மேலதிக அமினோ அமிலம் என்ன பதார்த்தமாக மாற்றப்படுகின்றது.

VIII) இடது இதய அறையில் உள்ள குருதியானது சிறுநீரகத்தை அடைந்து மீண்டும் இடது இதய அறையை அடையும் வரையான பாதையை அம்புக்குறிப்படம்மூலம் காட்டுக.

வினா 06.

6)




ஆய்வு கூடத்தில் ஐதரசன் வாயு தயாரிப்பதற்கு மாணவன் ஒருவன் அமைத்த உபகரண அமைப்பு மேலே காட்டப்பட்டுள்ளது.

I) A தொடக்கம் F வரையான ஆங்கில எழுத்துக்களினால் குறிக்கப்பட்டுள்ள உபகரணங்களின் பெயர்களை எழுதுக.

II) நடைபெறும்இரசாயணத் தாக்கத்துக்கான சமப்படுத்தப்பட்ட சமன்பாடுகளை எழுதுக

III) ஐதரசன் வாயுவை இனம் காண்பதற்கான எளிய பரிசோதனை ஒன்று கூறுக?

IV) ஐதரசன் வாயுவை மிக வேகமாக வெளிவரச் செய்வதற்கு மாணவன் மேற்கொள்ளக் கூடிய இரண்டு நடவடிக்கைகள் கூறுக?

V) இங்கு நாகத்துண்டுகளுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படக்கூடிய வேறு ஒரு உலோகம் கூறுக?

VI) குளோரீன் வாயுவைத் தயாரிப்பதற்கு நாகத்துண்டுகளுக்குப் பதிலாக எடுக்க வேண்டிய இரசாயணப் பதார்த்தம் எது?

VII) குளோரீன் வாயுவைத் தயாரிக்கும் போதுநடைபெறும் இரசாயணத் தாக்கத்துக்கான சமப்படுத்தப்பட்ட சமன்பாட்டை எழுதுக.

VIII) குளோரீன் வாயுவின் நிறம் என்ன?


வினா 07 7)

I) 50 kg திணிவுடைய பொருளின் நிறையை நியூட்டனின் தருக (g=10ms-2)

II) 120 N நிறையுடைய ஒரு மரக்குற்றியை தொழிலாளி ஒருவன் 60m தூரத்துக்கு காவிச்சென்றால் அவனால் செய்யப்பட்ட வேலை என்ன?

III) நெம்புகோல் ஒன்றின் மூலம் - 750 N,நிறையுடைய கல்லைப் புரட்டுவதற்கு 600N விசை பிரயோகிக்கப்பட்டது எனின் நெம்புகோலின் பொறிமுறை நயம் என்ன?

IV)




தரையில் இருந்து 2 m உயரத்தில் உள்ள லொறியின். தளத்துக்கு 3m நீளமான மரப்பலகையை சாய்தளமாகப் பயன்படுத்தி 800N நிறையுடைய மண்ணெண்ணெய் பரலை ஏற்றுவதற்கு 750 N விசை பிரயோகிக்கப்பட்டது எனின்

1. பொறிமுறை நயம் என்ன?
2. வேக விகிதம் என்ன?
3. திறன் என்ன?

V) இழை மின்குமிழ் ஒன்று 5 நிமிடம் ஒளிர்வதற்கு 30KJ மின்சக்தி பயன்படுத்தப்பட்டது எனின் மின்குமிழின் வலுவை வாற்று அலகில்தருக.

VI) 30°C இல் உள்ள குறிப்பிட்ட திணிவுடைய நீருக்கு 21KJ வெப்பசக்தி வழங்கப்பட்டபோது நீரின் வெப்பநிலை 50°C ஆக உயர்ந்தது எனின் நீரின் திணிவைக் காண்க.

(நீரின் தன்வெப்பக் கொள்ளளவு $4200 JKg^{-1}\,{}^{o}C^{-1}$)

வினா 08.

I) பின்வரும் இரசாயனச் சமன்பாட்டைச் சமப்படுத்துக

$Na + H_2 0$ ® $NaoH + H_2$

II) 4.6 g Na துண்டு முற்றாக நீருடன் தாக்கமடையும் போதுவெளியாகும் ஐதரசன் வாயுவின் திணிவு என்ன? (Na = 23)

III) $Ca(OH)_2$ என்ற சேர்வையின் சார் மூலக்கூற்றுத் திணிவைக் காண்க.
(Ca=40 H=1 O=16)

IV) $Caco_3$ ® $Cao + Co_2$
14 KgCao ஐ தயாரிப்பதற்கு முற்றாக வெப்பமேற்றப்பட வேண்டிய $Caco_3$ இன் திணிவு என்ன?

V) பின்வரும்மூலகங்கள் இயற்கையில் காணப்படும் ஒவ்வொரு தாதுப்பொருள்களைக் குறிப்பிடுக.

1) இரும்பு
2) சோடியம்
3) செம்பு
4) அலுமினியம்
5) பொட்டாசியம்
6) கல்சியம்
7) மகநீசியம்
8) பொஸ்பரஸ்.

# களுத்துறையில் வெள்ள அபாயம்

பேருவளை,ஒக்.15

களுத்துறை மாவட்டத்தில் கடந்த இருநாள்களாகப் பெய்துவரும் மழை காரணமாக மீண்டும் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

பேருவளை, பயாகலை, பாலிந்தநுவர, மத்துகம, களுத்துறை ஆகிய பகுதிகளில் தாழ்நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஆரம்பித்த மழை நேற்றுமுன்தினம் முற்பகல் வரை தொடர்ச்சியாகப் பெய்துகொண்டிருந்தது.

களுகங்கையின் நீர்மட்டம் மீண்டும் அதிகரித்துள்ளது.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நயினாதீவைச் சேர்ந்த ரவீந்திரராசா - லலிதா தம்பதிகளின் புதல்வியும் நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி வித்தியாலய மாணவியுமாகிய

செல்வி ர.வித்தியப்பிரதா

அவர்கள் 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 153 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமையையிட்டு அவரை மனதார வாழ்த்திப் பாராட்டுவதுடன் அவரைக் கல்வியறிவூட்டி ஊக்குவித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகத்தினர் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நயினாதீவு.(37511)(43-34-16) தாத்தா, அம்மம்மா, மாமா, மாமி.



## வாழ்வகம் பாராட்டி வாழ்த்துகின்றது

1. யா/யூனியன் கல்லூரியில் கல்விகற்கும் எங்கள் வாழ்வகப் பிள்ளை கு.ஜெகதீசன 2 ஆவது தடவையாகவும் அகில இலங்கை ரீதியில் தனி இசையில் முதலாம் இடத்தைப் பெற்றமையையிட்டு வாழ்வக சமூகம் பெருமிதங்கொள்வதோடு, அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றது. அவருக்கு இசைத்துறையில் உறுதுணை புரியும் இசை ஆசிரியை செல்வி மு.ஜெயகௌரி அவர்களையும், சகல துறைகளிலும் வாழ்வகப் பிள்ளைகளுக்கு உதவி வரும் யா/யூனியன் கல்லூரி அதிபர் அவர்களையும் நன்றியுடன் மனமுவந்து பாராட்டுகிறோம்.

2. யா/இராமநாதன் கல்லூரியில் தரம் 5 இல் கல்வி கற்கும் எங்கள் வாழ்வகப் பிள்ளைகளான செ.சோதிப பெருமாள், அ.காயத்திரி ஆகிய இருவரும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையையிட்டு வாழ்வகம் பெருமிதங்கொள்வதோடு, அவர்களையும் பாராட்டுகிறது. அவர்கள் கல்வியில் திறமையடைய உதவிய வகுப்பாசிரியர் திருமதி ஜெயரூபன் அவர்களையும் எமது விசேட ஆசிரியை செல்வி பூ.தாமரைச்செல்வி அவர்களையும் சகல துறைகளிலும் உதவி வரும் யா/இராமநாதன் கல்லூரி அதிபர் அவர்களையும் நன்றியுடன் மனமுவந்து பாராட்டுகின்றோம்.

வாழ்வகம் , விழிப்புலன் வலுவிழந்தோர் இல்லம்,
சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம். - வாழ்வகக் குடும்பம்.
(37575)(43-34-16-19)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
வேலுப்பிள்ளை இராசம்மா

மலர்வு 06-05-1932 உதிர்வு 11-10-2003

திதி : 15.10.2004

ஆண்டொன்று சென்றதம்மா ஆறவில்லை எம்துயரம்
உங்கள் நிழலில் வாழ்ந்த வாழ்வுபோல் இனி வருமா?
அன்பாய் அரவணைத்து ஆதரவு மொழிபேசி ~ எம்மை
வாழவைத்த தெய்வமே! உங்கள் திருமுகத்தை
இனி எப்போ காண்போமம்மா!

சிவன் கோயில் வீதி,
எழுதுமட்டுவாழ். (37572)(30-34-16-19) - குடும்பத்தினர்.



## 31 ஆவது நாள் நினைவுகள்



புலோலியூர் க.சதாசிவம்
(Dr.K.Sathasivam)

இலங்கையின் மூத்த எழுத்தாளரும் பன்முறை சாகித்தியப் பரிசுபெற்ற நாவலாசிரியரும் சிறந்த சிறுகதை எழுத்தாளரும், வடமராட்சியில் பிறந்து வடமராட்சிப் பிரதேச நாவல்கள், சிறுகதைகளைத் தந்தவரும் மலையகத்தில் வைத்தியசேவை ஆற்றியதுடன், மலையக இலக்கியத்தில் மைல்கல்லாக விளங்கியவரும் இலக்கிய வித்தகர், இலக்கிய செம்மல் போன்ற கௌரவப் பட்டங்களைப் பெற்றவரும் ஞானம் கலை இலக்கிய சஞ்சிகையின் இணை ஆசிரியருமாகிய புலோலியூர் க.சதாசிவம அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- வாசகர்கள், இலக்கிய நண்பர்கள்.

(37515)(42-34-16-19)


# மின் கட்டணம் நவம்பரில் உயரும் என சமிக்ஞை!

மின்சாரக்கட்டணம் அடுத்தமாதம் நவம்பரில் இருந்து அதிகரிக்கப்படலாம் என முன் சமிக்ஞை காட்டியுள்ளார் இலங்கை மின்சார சபைத் தலைவர் ஆனந்த குணசேகர.

அத்தோடு, மின்சாரசபையின் நிர்வாகக் கட்டமைப்பும் தனித்தனியாகப் பிரிக்கப்பட உள்ளன எனவும் அவர் நேற்றுத் தெரிவித்தார்.

மின்சார சபையின் பணிகளில் ஒழுங்குபடுத்தல் வேறாகவும், பரிவர்த்தனை தனித்தும், விநியோகம் சுயேச்சையாகவும் செயற்படவுள்ளன. அதிலும், விநியோகப்பகுதி மேலும் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்படும் என்றும், இச்சீர் திருத்தம் டிசெம்பரில் நடைமுறைக்குவரும் என்றும் குணசேகர தெரிவித்தார்.

மின்சார சபைக்குள் இடம்பெறும் இச்சீர் திருத்தம், தனியார் மயமாக்கலுக்கு அளிக்கும் முன் நடவடிக்கை எனவும் சில தொழிற்சங்கங்கள் விவரித்துள்ளன. (க-8)

# வாடகைக்கு அமர்த்தியோர் சாரதியைக் கொன்று ஓட்டோவைக் கடத்தினர்

வவுனியா,ஒக்.15

ஓட்டோவை வாடகைக்கு அமர்த்திச்சென்ற நான்குபேர் அதன் சாரதியைக் கொலைசெய்து விட்டு ஓட்டோவைக் கடத்திச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் வவுனியா, அரசடிக்குளம் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை பட்டப்பகலில் இடம்பெற்றுள்ளது.

மதினாநகர், பூந்தோட்டத்தைச் சேர்ந்த கப்புடையார் மொகமட் அமீர் (வயது-27) என்ற ஓட்டோச் சாரதியே இவ்வாறு கொலை செய்யப்பட்டவர் ஆவார்.

ஓட்டோவைக் கடத்திச் சென்றவர்கள், அதன் சாரதியைக் கத்தியால் குத்திக்கொலை செய்து சடலத்தைக் கிணறு ஒன்றில் தூக்கிப் போட்டுள்ளனர்.

சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்ட வவுனியா நீதிவான் எம்.இளஞ்செழியன், கடத்தப்பட்ட ஓட்டோ வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுவதைத் தவிர்ப்பதற்காக ஓமந்தை, உயிலங்குளம், மதவாச்சி, ஹொரவப் பொத்தானை வீதிகளில் பொலீஸ் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

மேலதிக விசாரணைகளை செட்டிக்குளம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சில்வா, குற்றத்தடுப்புப் பதில் பொறுப்பதிகாரி தர்மதாஸ ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை அப்பகுதி ஓட்டோச் சங்கத் தலைவர் த.பிரபாகரன் வன்மையாகக் கண்டித்துள்ளார். இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

(எ-க-164)

# மரம் நடுகைத் தினத்தையொட்டி மரக்கன்றுகளை நடுவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.15

தேசிய மரம் நடுகைத்தினம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாவதையொட்டி யாழ். மாவட்டத்தில் மரக்கன்றுகளை நடுவதற்கு அரச திணைக்களங்கள் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

தேசிய மரம் நடுகைத் தினத்தை முன்னிட்டு வனவளத் திணைக்களத்தின் யாழ். அலுவலகத்தினால் மரக்கன்றுகள் அரச திணைக்களங்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

இதேவேளை, தேசிய மரம் நடுகையை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் மரக்கன்றுகள் நடுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மரம் நடுகைத் தினமான இன்று ஜனாதிபதி மாளிகை வளவில் அவருடைய தலைமையில் ஆரம்பநிகழ்வு நடைபெறவுள்ளது.

(10-7)

# மூன்று பாடசாலைகளின் மைதானங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.15

இரண்டு லட்சம் ரூபா செலவில் யாழ். மாவட்டத்திலுள்ள மூன்று பாடசாலைகளின் விளையாட்டு மைதானங்கள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தினால் புனரமைப்புச்செய்யப்பட்டு வருகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் இளைஞர் விவகார அமைச்சின் நிதியுதவியுடன் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளின் விளையாட்டு மைதானங்களே புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

அப்பிரதேச இளைஞர் கழக உறுப்பினர்களும் பாடசாலைகளின் பழைய மாணவர்களும் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்றும் -

இம்மாத இறுதிக்குள் புனரமைப்புப் பணிகள யாவும் பூர்த்திசெய்யப்பட்டு விடும் என்றும் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் ரி. சிவதட்சணாமூர்த்தி தெரிவித்தார். (4-7)


## முதலாவது 1 பிறந்தநாள் வாழ்த்துக்கள்

Happy Birthday



கைதடியைச் சேர்ந்த
சுரேந்திரன் - ஜீவராணி
தம்பதிகளின் செல்வப் புதல்வி
லாவண்யா

செல்வி லாவண்யா

தனது முதலாவது பிறந்தநாளை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் இன்று (15.10.2004) வெள்ளிக்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். லாவண்யாவை நீர்கொழும்பு அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, அக்கா, சித்தப்பா, மாமா, மாமி, மச்சாள், டென்மார்க் பெரியப்பா, பெரியம்மா அக்கா, அண்ணாமார், கனடாச் சித்தி, சித்தப்பா, அண்ணாமார், லண்டன் சித்தப்பா, சித்தி, அண்ணாமார், கைதடி அப்பம்மா, பாட்டி, பெரியமாமா அத்தை, மச்சாள், அத்தான், சித்தப்பாமார், சித்திமார், அண்ணா, அக்கா, கிருபா அன்ரி ஆகியோர் பிள்ளையார் அருளால் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

க.நாகராசா, கைதடி. தகவல்: ரகு - ராசாத்தி (லண்டன்).

(37482)(34-16-19)



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



லண்டனில் வசிக்கும்
ஜெயசுதன் - ரேணுகா
தம்பதிகளின்
செல்வப்
புதல்வி
செல்வி
சுபானுகா

அரசடி, தொண்டைமானாற்றைச் சேர்ந்த ஜெயசுதன் - ரேணுகா தம்பதிகளின் செல்வப் புதல்வி செல்வி சுபானுகா தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (15.10.2004) வெள்ளிக்கிழமை லண்டனிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

செல்வி சுபானுகாவை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பா, கபிலன் சித்தப்பா, பிருந்தா அத்தை, தியாகலிங்கம் அப்பப்பா குடும்பம், ஆனைக்கோட்டை பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், அத்தைமார், ராஜன் அண்ணா, ஜதுஷ் அண்ணா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எல்லாம் வல்ல சந்நிதி முருகன் அருளால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

அரசடி, தொண்டைமானாறு. அன்புடன் வாழ்த்தும்: ரமணன் (சித்தப்பா).

(37398)(24-34-16-19)



## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 - 08 - 1930



உதிர்வு 15 - 10 - 1998

அமரர் பொ.அ.பிலிப் அரசரெட்டினம்
(ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர்)

ஆறடி நிலமே சொந்தமென எமைப்பிரிந்து
ஆறாண்டு ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்
மாறவில்லை உம் நினைவு
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு
உண்மை, அன்பு, சேவை
உமது வாழ்வில் கண்ட ஒழுக்கநெறி
எமது வாழ்வுக்கு வழிகாட்டும் தீபஒளி
இறைஞ்சுகின்றோம் இறைவனிடம்
இறை ஒளியில் நீர் வாழ
இறைஞ்சிடுவீர் இறைவனிடம்
இறைவழியில் நாம் வாழ!

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, சகோதரர்கள், ஞானப் புதல்வர்கள், மைத்துனர்கள், பெறாமக்கள், மருமக்கள்.

இல.17, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம். (37578)(34-16-19)

# ஐம்புலன்களையும் முக்கரணங்களையும் ஒருமுகப்படுத்தி தாய்த்தெய்வத்தை வழிபட்டால் நற்பேறு கிடைக்கும்

*"மாதா பராசக்தி வையமெல்லாம் நீ நிறைந்தாய்*
*ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே*
*ஏதாயினும் வழி நீ சொல்வாய் எமதுயிரே*
*வேதாவின் தாயே மிகப் பணிந்து வாழ்வோம்"*

என்பது பாட்டுக்கொரு புலவன் பாரதியார் பாடல்.

பாரதியாரைப் பார் முழுதும் அறியும் அகில உலகெங்கும் பாரதியாரை அறியவைத்தவளும் போற்றிப் புகழ்ந்து பாராட்ட வைத்தவளும் சக்தித் தெய்வமாகிய சரஸ்வதியே.

பாரதியின் இயற்பெயர் சுப்பிரமணியம். பிறந்த காலம் தொட்டும் இறக்கும் காலம்வரை இல்லாமை என்னும் வறுமைப் பிணியில் காணப்பட்டபோதும், தெய்வ நம்பிக்கையில், ஆதிபராசக்தியை இறுகப் பத்தியென்னும் பொற்சங்கிலியால் பிணித்தார்.

அதனால், எதுகை, மோனை, யாப்பு இவ்வாறான இலக்கணம் மிளிர, இசையும் ஓசையும் நதிபோல் மடைதிறந்து வரப் பல்வாறு சக்தி புகழை அனுபவம், சாதனை, முற்பிறவி ஞானத்தால் பக்தி நனிசொட்டச் சொட்டச் செந்தமிழ் இன்பம் பெருக உள்ளம் கசிந்து பாடி, சாக்தர்களுக்கும் மற்றையோருக்கும் அன்னையின் திருவருட்கடாட்சம் பாடலை சொல்வோவியத்தால் தீட்டியுள்ளார்கள் பாரதியார். காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டாகும்.

சக்தி, தாய்த் தன்மை உடையவள். தாய் அன்பின் வடிவம். அதனால், சக்திக்கு "ஓம் ஸ்ரீ மாதா" என்ற மந்திரமும் உண்டு. உலகில் காணபடுகின்ற உயிர்கள் அத்தனையும் தாயின் அன்பினால் பெருகி தாயின் மீளா அன்பின் அரவணைப்பில் உயிர்ப் பெருக்கம் உண்டாவதை நாம் எம் ஊனக் கண்மூலம் காண்கின்றோம். அகக் கண் (அறிவு) மூலம் உணருகின்றோம்.

உலக மானிடத்தாயானவள் பூமிக்கும் பாரமாகப் பத்துமாதமும் குழந்தையை வயிற்றில் சுமக்கும் போது, வெகு சிரமத்துடன் கவனமாக நடந்து கொள்கின்றாள். குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு எறுப்பு போன்ற சிறிய பூச்சிகள் கடிக்காமல் இறைதியானத்துடன் என் குழந்தை உன் குழந்தை இதற்கு ஒரு தீங்கும் வரக்கூடாது, நோய்பிணி வரக்கூடாதென விடிவிளக்கெரித்துப் பாதுகாக்கின்றாள். குழந்தைக்குப் பசிக்க முன்பே குழந்தையின் பசியினை உணர்ந்து பால் ஊட்டுகின்றாள்.

இதனாற் போலும் மணிவாசகப்பெருமான், சிவபெருமானின் *"பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து"* என்று பாடுகின்றார். ஆனால், அண்ட சராசரங்களைப் படைத்துக் காக்கும் ஸ்ரீ ஆதிபராசக்தியின் பெருமையை, சொல்லால், எழுத்தால் ஏன் சுருதியால் பேசவும் முடியுமோ.

உலக மாதாவாகிய அன்னை பராசக்தியை பக்தர்க்கு விளம்பப் பலர் அன்னையின் அனுபூதிகளை சாதனையில் கண்டனர். அதனால், பல பல நூல்கள் அன்னை பற்றி எழுதப்பட்ட அனுபவ ரீதியாகவும் சாதனையிலும் கண்ட உண்மைகளை பண்டைக் கால முனிவர்கள் கேள்வி ஞானம் மூலம் பரப்பினர். பின்னர் அவை தேவி பாகவதம், தேவி மான்மியம் எனப் பல நூல்களாக சமஸ்கிருதச் சுலோகத்தை நூல் வடிவம் பெற்றன.

பின்னர் தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டன. அவற்றை முழுமையாகப் படித்துப் பயன்பெற வேண்டுமாயின் தேவியின் திருவருட் கடாட்சம் வேண்டும்.




வேத ஆகமங்களில் குறிப்பிட்டபடியே தேவியின் மகிமை, பராக்கிரமம், அருள் என்பவை பக்திபூர்வமாகக் காணப்படும் அந்த நூலை கலியுகத் தர்மத்தில், கணனி வாழ்வே தஞ்சமென வாழ்வோர் எப்படி முழுமையாக வாசித்துச் சாதனையும் அனுபூதியும் அடையமுடியும்.

ஒரு காலத்தில் தேவியைப் பெண்கள் மட்டுமன்றி ஆண்கள், குழந்தைகள் கூட ஆகம விதிப்படி இருஷிகேசம் முதல் கன்னியாகுமரி வரை வழிபட்டு அனுகூலம் அடைந்தார்கள். "யாம் பெற்ற இன்பம் யாவரும் பெற வேண்டுமென்று, தன் நலம் கருதாப் பெருமக்கள் உலகெங்கும் பரப்பினர். பின்பற்றியோர் இன்றும் தேவியருளுடன் சங்கமித்த பெருவாழ்வு வாழ்வதைக் காண முடிகின்றது.

அத்தகைய தாய் வழிபாட்டை இலகுவில் வழிபட, பல நாம உருவங்களை சாக்தர்கள் உண்டாக்கினார்கள். ஒரே அரிசி, தொழில் வேறுபாட்டால் வேறுவேறு பெயர்களைப் பெறுவது போல சக்தியும் தொழில் வேறுபாட்டால் வேறு வேறு நாமங்களை அடைந்தாலும் சக்தி ஒன்றே ஒன்றுதான். சாக்தர்கள் சக்தியைப் பிரமப்பொருளாக வைத்து, சக்தி மந்திரங்களால் உச்சாடணம் செய்து அனுபூதி பெற்ற வரலாறுகள் அதிகம்.

சக்தியின் ஒப்பற்ற மந்திரங்களில் சாக்தர்களில் சிலர் ஸ்ரீ லலிதாம்பிகை பூ வித்தியா மந்திரங்களை உபாசனை செய்து காரிய சித்தி பெற்றனர். ஒரு சிலர் ஸ்ரீ காயத்திரி மந்திரங்களை உச்சாடனம் செய்து அனுபூதியடைந்தனர். இதனைவிட சங்காரச் சிவாச்சாரியர் ஸ்ரீ இராமகிருஷ்ணர் போன்றோர் சக்தியை வேறு வேறு மந்திரங்களை உச்சாடனம் செய்து அனுபூதி பெற்றனர்.

"காளமேகப் புலவர், காளிதாசன் போன்ற படிப்பறிவில்லாதவர்களாக இருந்தாலும், அவர்களின் பூர்வீகப் புண்ணியம் சக்தியருள் பெற்றனர். அபிராமிப்பட்டர் கூட அபிராமி அம்மையை வழிபட்ட பயன் அமாவாசைத்திதியை பூரணைத திதியாக்கியது.

சக்திக்குரிய விரதங்களில் நவராத்திரி விரதம் மிகவும் சிறப்பானதாகும் சிவனுக்கு ஓர் இரவு சிவராத்திரி சக்திக்கு ஒன்பது இரவு நவராத்திரி.

நவராத்திரி விரதம் கட்டுப்பாடற்ற எல்லா இடமும் எல்லோரும் அனுஷ்டிக்கலாம். வீடுகள், தொழிற்சாலைகள், பாடசாலைகள், பொது இடங்கள், வியாபார இடங்கள் என்று எல்லோரும் தத் தம் உயர்ச்சிக்காக, வெற்றிக்காக இவ் விழாவை அனுஷ்டிப்பார்கள்.

புரட்டாதி மாதம் கன்னி மாதம் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இந்த மாதம் வருகின்ற பூர்வபக்க அமாவாசைத் திதியின் மறுநாள் பிரதமை தொடக்கம் விஜயதசமி அதாவது, பத்தாவது நாள் முடியும் வரை நவராத்திரியாகும். பிரதமை தொடக்கம் நவமி வரையும் துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி ஆகியோர் மூன்று மூன்றாகப் பிரித்து கும்பத்தில் ஆவாகித்து வணங்குவர்.

புரட்டாதி அமாவாசையின் மறுநாள் பிரதமையன்று, நல்ல சுபமுகூர்த்தத்தில் தட்டில் இருவாட்டி மண்கலந்து நீரினால் நனைத்து, மண் பானையில் ஆகம விதிப்படி நூலினைச் சுற்ற வேண்டும். தூய மனதுடன் பக்தி சிரத்தையுடன் பானையில் நீர் நிரப்பி மூன்று அல்லது ஐந்து, ஏழு மாவிலை வைத்து கழுவிய முடியுள்ள தேங்காயை இலைகளோடு கூடிய பானையில் வைத்தல் வேண்டும்.

மந்திர உச்சாடனம், பிரார்த்தனைகளுடன் பழம்,பாக்கு, நிவேத்தியம் வைத்தல் வேண்டும். பிள்ளையாரும் சாணியில் பிடித்து வைத்துத் தேங்காய் உடைத்து தீப, தூபம் முதலியவற்றால் அர்ச்சிக்கவேண்டும்.

முதல் மூன்று நாளும் துர்க்கையம்பாள் கும்பத்திலிருந்து வழிபடுவோர்க்கு வீரமும் தீர்க்க ஆயுளும் தருவாள். இரண்டாம் மூன்று நாள்கள் மகாலட்சுமிக்குரிய நாள்கள். தன்னை வழிபடும் பக்தர்களுக்குச் செல்வம் தருவாள். கடைசி மூன்று நாளும் சரஸ்வதிக்குரிய நாள்கள். இவள் தன்னை வழிபடுவோர்களுக்கு ஞானம் அருள்வாள்.

மனிதனைப் பூரணமனிதனாக்குவது வீரம், செல்வம், ஞானம் இந்த மூன்றையும் விரும்புவோர் நவராத்திரி விழாவை அனுஷ்டிக்கத்தவற மாட்டார்.

விஜயதசமி வெற்றித்திருநாள். இந்த நாளில் தான் மகிடாசுரனை அன்னை அழித்தாள் என்பது புராணக் கதையாகும். இந்த நல்ல நாளில் குழந்தைகளுக்கு ஏடு தொடக்குவதுண்டு. இந்த விரதம் பற்றிய கதையொன்று தேவி மகாத்மியத்தில் எழுநூறு சமஸ்கிருத சுலோகங்களில் கூறப்பட்டுள்ளது.

ஒரு அரசன் போரில் தோற்று நாடு,நகரிழந்து வெட்கமடைந்தான். அதனால், வேட்டையாடப் போவது போலக் காட்டுக்குச்சென்று அங்கு ஓரிடத்தில் இருந்தான். அந்த அரசன் பெயர் சுரதன். அதேபோல, வணிகனான சமாதியும் மனைவி பிள்ளைகளால் விரட்டப்பட்டு அதே காட்டிற்கு வந்தான்.

அரசனும் வணிகனும் ஒருவரையொருவர் சந்தித்தனர். தமது வாழ்க்கையில் தாம் பட்ட துயரமும், பின்னர் அவை தம்மை விட்டுவிலகிய காரணங்களையும் ஒருவருக்கொருவர் கூறி மீளாத்துயரில் ஆழ்ந்தனர்.

பின்னர் காட்டில் ஒரு புறத்தில் காணப்பட்ட ஆச்சிரமம் சென்று அங்குள்ள முனிவரிடம் தம் குறைபாடுகளைக் கூறி கண்ணீர் விட்டழுதனர்.


## குப்பிளானூர் மாதாஜி

முனிவர் புன்முறுவல் செய்தார். உலகம் நிலையாமை பற்றி விளக்கம் கொடுத்தார். பின்னர் அந்த முனிவர் அவர்களுக்கு ஸ்ரீ வித்தியா மந்திரம் உபதேசித்தார். அதன்பின்னர் நவராத்திரியின் பெருமை, ஸ்ரீதேவி மகாத்மிய மந்திர சுலோகங்கள் யாவும் உபதேசம் செய்து, நீங்கள் நவராத்திரி விரதம் அனுஷ்டித்துத் தவம் செய்யுங்கள். யாவும் வெற்றியாகும் என்று அருளினார்.

அரசனும், வணிகனும் முனிவரின் உபதேசப்படி தேவியை நோக்கித் தவமிருந்தார்கள். அவர்களின் தவத்தையும் விரதத்தையும் தியானத்தையும் மெச்சித் தேவி அருள்புரிந்தாள். இந்த நிகழ்ச்சி மனுவின் காலத்தில் நடந்தது.

எனவே, நவராத்திரி விரதம், கேதாரகௌரி விரதம் இருக்கும்போது ஐம்புலன்களையும் முக்கரணங்களையும் சிதறவிடாது ஒருமுகப்படுத்தி விரதமிருந்தால் பலனும் வெற்றியும் கிடைக்கும் என்பது துணிவாகும். ※

---



# விழிப்புலனிழந்தோரின் உற்ற நண்பன் வெள்ளைப்பிரம்பு

**1930 ஆம் ஆண்டு சர்வதேச லயன்ஸ் கழகங்களால் முன்னெடுக்கப்பட்ட வெள்ளைப்பிரம்பின் முக்கியத்துவம். இன்று ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி சர்வதேச ரீதியாக வெள்ளைப் பிரம்புதினம் எனக் கொண்டாடப்படுகின்றது. இத்தினத்தின் முக்கியத்துவத்தினையும் அத்துடன் வெள்ளைப்பிரம்பு சம்பந்தமாக குறிப்பாக வாகனச் சாரதிகளுக்கும் பொதுவாக மக்களுக்கும் விழிப்புணர்ச்சி தரும் வகையில் இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

### வெள்ளைப்பிரம்பு என்றால் என்ன?

ஒக்ரோபர் 15 ஆம் திகதி சர்வதேச ரீதியாக வெள்ளைப்பிரம்பு தினம் கொண்டாடப்படுகின்றது. வெள்ளைப்பிரம்பு என்பது விழிப்புலனற்றவர்களால் பாவிக்கப்படும் ஒரு கருவியாகும். இப்பிரம்பினைக் கையில் வைத்திருப்பவர் விழிப்புலன் அற்றவர் அல்லது குறைந்தவர் என விசேடமாக இனங்காண உதவப்படுவதுடன் தங்களால் பரீட்சயப்பட்ட மற்றும் மாறுபட்ட எந்தச் சுற்றாடலிலும் தங்களுடைய பயணத்தினை மேற்கொள்ளவும் உதவுகின்றது. ஆகவே, இப்பிரம்பினைக் கையில் வைத்திருக்கும் விழிப்புலனற்ற ஒருவருக்கு தன்னுடைய சுற்றாடல் சம்பந்தமான தகவல்களை அறிவதற்கும் - மற்றும் ஏற்படும் தடைகளிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்குமாக இரண்டு முக்கிய விடயமாகச் செயற்படுகின்றது. இப்பிரம்பினைப் பாவிப்பதற்கு ஒருவகையான திறமை தேவைப்பட்டாலும் இப்பாவனை சம்பந்தமான பயிற்சி மூலமாக தன்னுடைய சுயமான போக்குவரத்து உரிமையினை நிலைநாட்டும் பக்குவம் கொண்டவராகின்றார். ஆகவே, விழிப்புலனற்றவர்களுக்கு வெள்ளைப்பிரம்பானது ஓர் உற்ற தோழனாக உதவுகின்றது.

### வெள்ளைப்பிரம்பும் மக்களின் பங்களிப்பும்

விழிப்புலனற்றவர்களால் வெள்ளைப்பிரம்பு பாவிக்கப்படுவதைக் கௌரவிக்கும் வகையில் அதன் முக்கியத்திற்கு, மக்களாகிய எமக்கும் குறிப்பாக வாகனச் சாரதிகளுக்கு உரிய பொறுப்புக்கள் அமைந்திருக்கின்றன. வெள்ளைப் பிரம்பினைக் கையில் வைத்திருக்கும் ஒருவர் வீதியைக் கடக்க முற்படும் போது அவருக்கு எதுவிதமான இடைஞ்சலுமில்லாமல் பாதையினைக கடக்க உதவவேண்டும். வெள்ளைப்பிரம்பு சம்பந்தமான சட்ட அறிவுரையானது கீழ்க்கண்டவாறு கூறுகின்றது.

"யாரவது ஒருவர் வெள்ளைப்பிரம்பினைக் கையில்கொண்டு வீதியினைக் கடக்க முயலும்போது குறைந்தது 10அடிக்கு அப்பால் வாகனச்சாரதிகள் வாகனங்களை நிறுத்த வேண்டும். மற்றும் பாதசாரிகள் விதிகளை வெள்ளைப்பிரம்பு கையில் வைத்திருப்பவர்கள் அனுசரிக்காவிட்டாலும் வாகனச் சாரதிகள் வாகனங்களை நிறுத்துவது அவர்களுடைய பொறுப்பாகும்.

மற்றும் பொதுமக்களாகிய நாங்களும் எந்தச் சூழ்நிலையிலும் குறிப்பாக மிகவும் நெரிசலானதொரு போக்குவரத்து நேரங்களில் வெள்ளைப்பிரம்பினைக் கொண்டவர்களுக்கு எமது உதவியினைச் செய்யவேண்டும்.

ஆகவே, இந்நிலையில் எமது கடப்பாடு என்ன?

விழிப்புலனற்றவர்கள் சுயமாக நகரும் திறமையும் உரிமையும் உடையவர்கள்.

விழிப்புலன் உள்ளவர்களாகிய நாங்கள் அவர்களுடைய உரிமையினை மேற்கொள்ளவும மற்றும் அவர்கள் சுகமாகவும் நம்பிக்கையுடன் பிரயாணம் செய்ய உதவுவதும் எமது பொறுப்பாகும்.

### வெள்ளைப்பிரம்பு தினம் எவ்வாறு தோற்றுவிக்கப்பட்டது?

1920ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெள்ளைப் பிரம்பு சம்பந்தமாக ஒருதோற்றம் ஏற்பட்டது. ஜேம்ஸ் பிக்ஸ் (James Biggs) என்கின்ற ஓவியர், விபத்தினால் தன்னுடைய பார்வையினை இழந்தபோது தன்னுடைய புதிய சுற்றாடலுக்கேற்ப தன்னை மாற்றிக்கொள்ள இவர், பாவித்த பிரம்பிற்கு வாகனச்சாரதிகளுக்கு தன்னை அடையாளம் காணும் வகையில் வெள்ளை நிறச்சாயமூட்டினார். இவ்வாறு 1921ஆம் ஆண்டு வெள்ளைப பிரம்பு உருவெடுத்தாலும் 1931 வரை இது சமூகத்தில் பெரிய இடத்தினைப் பெறவில்லை. இருப்பினும் 1930ஆம் ஆண்டு வெள்ளைப்பிரம்பு சம்பந்தமானதொரு கட்டளைச் சட்டம் உருவாக்கப்பட்டது. தொடர்ந்து 1931ஆம் ஆண்டு சர்வதேச லயன்ஸ் கழகமானது தேசிய ரீதியில் பாரியளவிலானதொரு முன்னெடுப்பினை வெள்ளைப்பிரம்பு சம்பந்தமாக மேற்கொண்டது. இவ்வாறாக, வளர்ச்சிகண்ட, வெள்ளைப்பிரம்பின் பாவனை ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி 1964ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவின் அப்போதைய ஜனாதிபதி லிண்டன் ஜோன்சன் அவர்களால் ஒக்ரோபர் 15ஆம் திகதி சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அன்று தொடக்கம் வெள்ளைப்பிரம்பு தினமானது விழிப்புலனற்றவர்களது நன்மை கருதி சர்வதேச ரீதியில் பல செயற்றிட்டங்களுடன் செயற்பட்டு வருகின்றது. இலங்கையில், வெள்ளைப்பிரம்பு தினமானது, முதன்முறையாக 1969ஆம் ஆண்டு தொடக்கம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ்வாறாக, வெள்ளைப்பிரம்பின் ஆரம்ப வடிவமைப்பு 1930ஆம் ஆண்டு பிறோறியா லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் ஜோர்ஸ் பொன்காம் அவர்களால் வடிவமைக்கப்பட்டு இப்பொழுது வெள்ளை நிறத்துடன், நுனியில் சிவப்பு நிறம் கொண்டதாக விழிப்புலனற்றவர்களால் பாவிக்கப்பட்டு வருகின்றது.

### வெள்ளைப்பிரம்பு தினமும் சர்வதேச லயன்ஸ் கழகங்களும்

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் செயற்றிட்டங்களில் "பார்வைக்கு முதலிடம்" என முன்னுரிமைப்படுத்தி செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. சர்வதேச ரீதியல் விழிப்புலனற்றவர்களின் முன்னேற்றங்களுக்கான பல செயற்றிட்டங்களில் இத்தினத்தில் சகல கழகங்களும் ஈடுபட்டுவருகின்றன. குறிப்பாக இவ்வருடம் பார்வைக்கு முதலிடம் செயற்றிட்டத்தின் யாழ்.மாவட்டத் தலைவராகிய லயன் K.M. பத்மநாதன் அவர்கள் "விழிப்புலன் சம்பந்தமான ஒரு நிதியத்தினை" யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிக்கவுள்ளார்.

இவ்வாறாக நாம் எல்லோரும் வெள்ளைப் பிரம்பினையும் விழிப்புலனற்றவர்களையும் ஆதரித்து அனுசரித்து நடப்போமாக.

**லயன் செ.ஞானராஜா,**
பிரதிச்செயலர், மாவட்டம் 306B.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

பருத்தித்துறை, செட்டித்தெருவில் ஐந்து அறைகள் உள்ள வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: த.விஜேந்திரன், இரத்தினமகால் செட்டித்தெரு, பருத்தித்துறை. T.P.: 2263928. (சி-38204)

## வீடு வாடகைக்குத் தேவை

2பேர் வசிக்கக்கூடிய சகல வசதிகளுடனும் கூடிய வீடு தனியாக அல்லது பகுதியாக வாடகைக்குத் தேவை. யாழ். மாநகரசபை எல்லைக்குள் விரும்பத்தக்கது. தொடர்பு: T.P.: 077 6500040. (37597)

## வீடு வாடகைக்கு

யாழ்.நகர் இல.14, மாட்டின் வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட சகல வசதிகளுடன் கூடிய (முற்று முழுதாக மாபிள்) வீடு. அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப்படும். நேரிலும் தொடர்புகொள்ளலாம். T.P.: 0777 - 733066. (37595)

## சேவை

55,000 அமெரிக்க நிரந்தர விசா லொத்தர் latest விண்ணப்பப் பூரண விவரங்களை VPP மூலம்பெற தொடர்புகொள்க. B2/F23 Bloeraendhal Flats, Colombo - 13.
T.P.: 077 3081764, 2438367. (சி-38091)

## தவறிவிட்டது

பு.ஜெயராஜா என்பவரது தே.அ.அட்டை (இல.811723568V), வி.அடையாள அட்டை என்பன யாழ்.நகரிற்கும் காரைநகர் கடற்கரைக்கும் இடையில் 10-10-2004 அன்று தவறிவிட்டன. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் 021 4590566 அல்லது ஷாரு தொலைத்தொடர்பு நிலையம், 123, கண்டி வீதி, அரியாலை எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (37587)

## சரஸ்வதி பாமாலை

நவராத்திரி விழாவை முன்னிட்டு சுன்னாகம் தெற்கு இந்து இளைஞர் மன்றத்தினர் 'கலைமகள் பாமாலை' என்னும் பிரசுரத்தை வெளியிட்டு இலவசமாக விநியோகித்து வருகின்றனர்.(ஐ-202)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/இளவாலைக் கன்னியர்மடம் மகர வித்தியாலயத்தின் ஆசிரியர்களான

**திருமதி நவரட்ணராஜா,**

**செல்வி அருளானந்தம்**

*ஆகியோர் தம் ஆசிரியப் பணியின் 25ஆண்டுகள் நிறைவினைக் கடந்த 11-10-2004 திங்கட்கிழமை அன்று கொண்டாடினார்கள். இவர்களை அன்புடன் வாழ்த்தும் நாம் இவர்களது ஆசிரியப் பணி சிறப்புறத் தொடர ஆசித்து நிற்கின்றோம்.*

அன்புடன் வாழ்த்தும்:
**2006 உயர்தர கலைப்பிரிவு மாணவிகள்,**
**இளவாலை கன்னியர்மடம் ம.வி.**

(சி-38206) (26-16-45)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1936 - 08 - 24 | 2004 - 09 - 15 |



### திருமதி சிவபாக்கியம் முருகேசு

அன்பு மழையால் அரவணைத்து எமை வளர்த்தீர்
ஆனந்தமாய் நாம் வாழ வழி வகுத்தீர்
அரவணைத்த உன் கரங்கள் எமை விட்டு
அகன்றுவிட்ட மாதம் ஒன்றானதுவே.

**இன்று (15.10.2004) வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன விருந்திலும் கலந்துசிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

தகவல்:
*4 ஆம் வட்டாரம். வேலணை கிழக்கு,* பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(37606) (43-16-45-26)

## நீங்காத நினைவுகளுடன் ஒரு வருடம்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 13 - 06 - 1944 | 27 - 09 - 2003 |



அமரர்

### புவனேஸ்வரி கனகரட்ணம்

*உள்ளத் தாமரையில் என்றும் மலர்ந்திருக்கும்
உங்கள் நினைவுகளில் உயிர்வாழும் நாம்
ஆண்டு ஒன்று கண்ணீருடன் கடந்தது – அம்மா
ஆறாத துன்பத்தில் தவிக்கின்றோம்.*

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (37601) (26-16-45) - குடும்பத்தினர்.

## கட்டட வசதியில்லை

வட்டுக்கோட்டை,ஒக்.15

கட்டட வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வரும் அராலி சமுர்த்திச் சந்தை பருவ மழை காலத்தில் இயங்குவது சிரமமானது என்று பொது மக்கள் விசனம் தெரிவித்திருக்கின்றனர்.

மர நிழலிலும், சிறு கொட்டகைகளிலும் இயங்கி வரும் இச்சந்தை, மழை காலத்தில் இயங்குவது சிரமமாகும்.

இச்சந்தையின் மூலம் பெருமளவு மக்கள் பயன்பெற்று வருவதால் மாரி காலத்தில் பெரும் சிரமங்களை எதிர் கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (10-161-202)

## லெப். மாலதி நினைவாக சிரமதானம்

கைதடி,ஒக்.15

இரண்டாம் லெப்.மாலதியின் 17ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டுக் கடந்த 10ஆம் திகதி கைதடி வடக்கு சனசமூக நிலையத்தினரால் கைதடி வடக்கில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

கைதடிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் முரளியினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த நிகழ்வில் கைதடி வடக்கு வன்னிய சிங்கம் வீதியிலுள்ள வெள்ளைவாய்க்கால் மற்றும் வீதிகள் என்பனவும் சீர் செய்யப்பட்டன. (10-75-202)

## முன்பள்ளி ஆசிரியர் கூட்டம்

கோண்டாவில்,ஒக்.15

நல்லூர் பிரதேச முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் முக்கிய கூட்டம் இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேசத்திற்கு உட்பட்ட அனைதது முன்பள்ளி ஆசிரியர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (10-49)

## இரவுக்காவலாளி தேவை

*எமது கோவிலில் இரவுகாவலாளியாகக் கடமையாற்ற விண்ணப்பம் கோரப்படுகின்றது. சம்பளம் நேரில் கதைத்துத் தீர்மானிக்கப்படும்.*

விண்ணப்ப முடிவுதிகதி:-
**23.10.2004 (சனிக்கிழமை)**

தொடர்பு: **செயலாளர்,**
**வண்ணை ஸ்ரீவிஸ்வலிங்க மகா கணபதி கோவில்**
(பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவில்)
**655, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**
(37594)

## இணையத்தளம்

பாடசாலைகள், சங்கங்கள், நிறுவனங்கள், விற்பனை மையங்களுக்கான இணையத்தளம்
Domain Registration, Hosting, Designing, Maintenance and e-mails
ஒரு வருடத்திற்கான மொத்தக் கட்டணம் ரூபா 8000/= மட்டும்.

**SAAMSTECH.**
841, Hospital Road, Jaffna.
Phone: 0773 068968.
(சி-37842)

## முன்பள்ளி விளையாட்டு விழா

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய், கல்வளை பாரதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது. மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் பொ.சிவலிங்கம் தலைமையில் நடைபெறும். (ஐ-13)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



யா/இணுவில் மத்திய கல்லூரி மாணவி

**செல்வி சோபிதா சிவேஸ்வரன்**

2004ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 149 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமைக்காக அவரையும் அவரை வழிநடத்திய அதிபர் மற்றும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து உதவிய ஆசிரியர்கள் அனைவரையும் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**கே.கே.எஸ். வீதி, இணுவில்.** (37604) (26-16-45) - குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*யாழ். பெரியபுலம் மகாவித்தியாலய மாணவியும் எமது நண்பியுமான*

**செல்வி இ.வைஷ்ணவி**

*அவர்கள் 2004ஆம் ஆண்டு 5ஆம் தரப்புலமைப்பரிசிற் பரீட்சையில் 129 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரைக் கல்வியறிவூட்டி நெறிப்படுத்தி வழிகாட்டிய ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*பாடசாலை வீதி. ஆறுகால்மடம்.* (37581)(42-16-26-45) செல்வி A.அபர்ணா.

## விற்பனையாகின்றது!



☆ வானொலி நாடகம் எழுதுவது எப்படி?
ஒரே ஒரு தமிழ் நூல்!
கலாபூஷணம்
அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை
எழுதியது
ரூபா 150/=
(37599) (43-16-45-26)

## யாழ். நகரில் M.M.I.C

ஒலிபரப்புக் கலைப் பயிற்சி
புதிய வகுப்புகள் 16.10.2004
சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆரம்பம்

இல.15, சிறாம்பியடி லேன்,
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
**T.P.:0777 316 258.** (சி-38195)(34-16-45-26)

புதிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

## யாழ்ப்பாணம் அரிமாக் கழகம் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம்

We Serve

**காலம்: 16-10-2004 சனிக்கிழமை**

யாழ். லயன்ஸ் கழகம், யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் மற்றும் லியோக் கழகங்கள் இணைந்து நடத்தும் சர்வதேச வெள்ளைப்பிரம்பு தின ஊர்வலமும் பொதுக்கூட்டமும் இசை நிகழ்வும் நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

ஊர்வலம்: யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி காலை 9.00 மணி
பொதுக்கூட்டம்: யாழ்.சன்மார்க்க வித்தியாலயம் காலை 11.00மணி
இசை நிகழ்வு: யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு மாலை 6.30மணி
(யாழ். விழிப்புலனற்றோர் சாகித்தியம் இசைக்குழு)

அரிமாக்கள், லியோக்கள், விழிப்புலனற்றோர், ஆர்வலர்கள், பொதுமக்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
லயன் த.அன்பானந்தன், தலைவர். (சி-38201) (2616-45)

## Direct Start

**OCTOBER** மாதத்திற்கான புதிய கொம்ப்யூட்டர் டிப்ளோமா பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

# COMPUTER TRAINING COURSES

- Diploma in MS Office (DMO)
- Diploma in Computer Studies (DCS)
- Diploma in Computer Programming (DCP)
- Diploma in Desktop Publishing (DTP)
- Diploma in Web Design (DWD)
- Diploma in Software Engineering (DCSE)



மேலதிக விபரங்களுக்கும், இலவச ஆலோசனைகளுக்கும்

# ASIAN COMPUTER SYSTEMS

| 2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | 108, K.K.S.வீதி, சுன்னாகம் (Jet Motors மேல் மாடி) | கொடிகாமம் வீதி நெல்லியடி (சுவெட்டி தபாலகத்துக்கு முன்பாக) |
|---|---|---|
| ✆ 021-222 5677 | ✆ 071-2501589 | ✆ 0777-878160 |

# தமிழ் இலக்கிய விழாவில் நூல் விருது பெற்றோர்


ஜெயரஞ்சினி ஞானதாஸ் (பல்துறை)


பத்மா சோமகாந்தன் (பல்துறை)


அன்ரனி நோபேட் (உயர் கல்வி)


ஓ.கே.குணநாதன் (சிறுவர் இலக்கியம்)


க.சபாரெத்தினம் (பல்துறை)


அருணா செல்லத்துரை (நாடகம்)


வி.கௌரிபாலன் (சிறுகதை)

## ஆளுநர் விருது பெற்றோர்


மு.கனகசபை


பி.ஸ்ரனிஸ்லாஸ்

கடந்த 13 ஆம் திகதி உதயனில் தமிழ் இலக்கிய விழாவில் ஆளுநர் விருது பெற்றோர் என்னும் தலைப்பில் வெளியான 2 படங்களில் விருதுபெற்றோர்களின் பெயர்கள் தவறுதலாக மாறிப் பிரசுரிக்கப் பட்டிருந்தமை சுட்டிக்காட்டப்படிருந்தது. அதனால், அந்த இரு படங்களும் இப் பகுதியில் மீண்டும் பிரசுரிக் கப்படுகின்றன.

# முஸ்லிம்களின் தனித்தரப்புக் குறித்த ஜனாதிபதியின் நிலைப்பாட்டை அறிந்தே ஸ்ரீலங்கா மு.கா.செயற்படும்

## ஏறாவூர் முப்பெரும் விழாவில் பஷீர் சேகுதாவூத் விளக்கம்

"ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் கடந்த 4 ஆம் திகதி கூட்டப்பட்ட சமாதானத்திற்கான தேசிய ஆலோசனைச்சபையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏன் கலந்துகொள்ளவில்லை என்பது இன்று உள்ளூர் அரசியல் அரங்கிலும், சர்வதேச அரங்கிலும் எழுந்துள்ள மிகப்பெருங் கேள்வியாகும். சமாதானத்திற்கான தேசிய ஆலோசனைச்சபைக் கூட்டத்திற்கான அழைப்பு எமக்குக் கிடைத்ததும் அது பற்றி ஆராய்வதற்கு முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் உயர்பீடம் கூடியபோது முஸ்லிம் காங்கிரஸ கலந்துகொள்வதா இல்லையா என்பது பற்றி இப்போது தீர்மானிப்பதில்லை என்றும் - சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்துகொள்வது தொடர்பான ஜனாதிபதியின் நிலைப்பாட்டை அறிந்துகொண்டதன் பின்னரே சமாதானத்திற்கான தேசிய ஆலோசனைச் சபையில் கலந்துகொள்வது பற்றி ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானிக்கும் எனவும் முடிவு செய்தோம்" - என்றார் பஷீர் சேகுதாவூத் எம்.பி.

ஏறாவூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 33 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற முப்பெரும் விழா வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பஷீர் சேகுதாவூத் அங்கு உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதானத்திற்கான தேசிய ஆலோசனை சபை தொடர்பாக எமக்கு மேலதிக விளக்கமும், அதனைப் பற்றி ஆராயவேண்டிய அவசியமும் ஏற்பட்டது. எனவேதான், இவை பற்றி ஜனாதிபதியுடன் நேரடியாகப் பேச்சு நடத்துவதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறும் கேட்டுக் கடிதமொன்றை அனுப்பிவைத்தோம். சமாதானச் சபைக் கூட்டத்தில் அவசரப்பட்டுக் கலந்துகொள்வதற்கான எந்தத் தேவையும் முஸ்லிம் காங்கிரஸுக்கு இருக்கவில்லை. இக்கூட்டம் 4 ஆம் திகதியுடன் முடிந்துவிட்ட ஒரு விடயமல்ல. மாதாந்தம் கூட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனவேதான், இவ்விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸ் அவசரப்படவில்லை. இதில் நாம் மிகவும் நிதானமாகச் செயற்பட்டோம்.

சமாதானத்திற்கான ஆலோசனை சபைக் கூட்டங்களில் அறவே ஒருபோதும் கலந்துகொள்வதில்லை என்று முஸ்லிம் காங்கிரஸ் இன்னும் தீர்மானிக்கவில்லை. தனித்தரப்புக் கோரிக்கை தொடர்பாக ஜனாதிபதியின் நிலைப்பாட்டை அறிந்துகொண்ட பின்பு சமாதானச் சபைக் கூட்டங்களின் கலந்துகொள்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை.

அரசாங்கம் ஐக்கிய தேசியக்கட்சி, தமிழீழ விடுதலைப் புலிகள், முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய நான்கு சக்திகள் மட்டுமே பேசுவதற்கு அருகதை உள்ள சக்திகள். இந்த நான்கு பலம்மிக்க சக்திகளுள் அரசாங்கம் மட்டுமே தேசிய ஆலோசனைச் சபையில் அங்கம் வகிக்கிறது. ஏனைய இரண்டு பலம்பொருந்திய சக்திகள் இல்லாத ஒரு சூழ்நிலையில் ஆலோசனைச் சபைக் கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் மட்டும் கலந்துகொண்டு முஸ்லிம் மக்களுக்கு எதனைச் சாதிக்க முடியும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகசபை யோசனைகளின் அடிப்படையில் அடுத்த கட்டப் பேச்சுக்களை ஆரம்பிக்க முடியுமென்று ஐக்கிய தேசியக் கட்சி கூறுகின்றது. ஆனால், முஸ்லிம் காங்கிரஸ் அவ்வாறு கூறவில்லை. முஸ்லிம்களுக்கென்று ஓர் இடைக்காலத் தீர்வு, இறுதித்தீர்வு முஸ்லிம் காங்கிரஸிடம் உள்ளது - என்றார். (க-8)

# நூலகக் கண்காட்சி யாழ்.மத்திய கல்லூரியில்

யாழ்ப்பாணம்,ஒக்.15

நூலக வாரத்தையொட்டி யாழ்.கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் நூலகக் கண்காட்சி எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை யாழ் - மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இக்கண்காட்சி இடம்பெறும்.

இதற்கான ஏற்பாடுகளை யாழ்.கல்வி வலய நூலக இணைப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் மேற்கொண்டுள்ளார்.

இக்கண்காட்சியில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக தமிழீழக் கல்விக்கழகத்தைச் சேர்ந்த அருண்மாஸ்ரர், யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை ஆகியோரும் கலந்துகொள்வர். (8-13)

## வாராந்த நிகழ்வு

வடமராட்சி,ஒக்.15

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று முற்பகல் 10.30 மணிக்கு பண்டிதர் சி.வேலாயுதம் "ஆறுமுகமான பொருள்" எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

இந்நிகழ்வுக்கான அறிமுகவுரையை பேரவையைச் சேர்ந்த சி.நாகலிங்கம் நிகழ்த்துவார். (10-173)

## நவராத்திரி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.15

இநது சமய கலாசார அலுவல்கள் திணைக்கள யாழ்.மாவட்ட அலுவலகம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்திவரும் நவராத்திரி விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று மாலை 5மணிக்கு நடைபெறும்.

பூசை வழிபாட்டினைத் தொடர்ந்து, 'சர்வம் சக்திமயம்' என்னும் பொருளில் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

தொடர்ந்து ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலை மாணவி ஜெ.இராஜமல்லிகையின் பேச்சு, நீர்வேலி கணேசா அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள், ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நாடகம் என்பனவும் இடம்பெறும். (10-204)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஒக்.15

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நவராத்திரி விழா நேற்று மாலை 5.30 மணிக்கு பம்பலப்பிட்டி, புதிய கதிரேசன் மண்டபத்தில் ஆரம்பமாகியது.

இதன் இரண்டாம் நாளான இன்று மாலை 5.30 மணிக்கு பூசை, வழிபாடுகள் ஆரம்பமாகி நடைபெற்றுத் தொடர்ந்து நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் ஜோன் செனவிரத்ன, மேல்மாகாண ஆசிரிய ஆலோசகர் திருமதி ஹேமா சண்முகசர்மா ஆகியோரின் உரைகளும் இடம்பெறும்.

தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (10-203)

## மீனவர்கள் புகார்

வடமராட்சி,ஒக்.15

வல்வெட்டித்துறை கடற்பரப்பில் கடற்றொழில் புரியும் மீனவர்கள் மீது கடற்படையினரின் தாக்குதல்கள் மீண்டும் அதிகரித்து வருவதாக வடமராட்சி வடக்கு கடற்புலிகளின் அரசியல் துறையிடம் மீனவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த வேளை படகில் சூழ் விளக்கு எரிய விடவில்லை எனக் கூறி கடற்படையினர் தங்கவேல் உதயகுமார் என்பவரைத் தாக்கியதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(10-173)

## நீராவியடி கிராம அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்களுடனான விசேட கலந்துரையாடல்

மேற்படி சங்கத்தின் எதிர்கால செயற்பாடுகள் பற்றியும், சுழற்சிமுறைக் கடன் வழங்குதல் பற்றியும் கலந்துரையாட வேண்டியுள்ளதனால் நாளைமறுதினம் 17.10.2004 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அனைத்து பயனாளிகள் மற்றும் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தா.உதயரத்தினம்,
தலைவர்.

(37585)(34-26-19-44)



## MOON BEAUTY CARE

அழகுக் கலைப் பயிற்சி நிலையத்தின்
புதிய COURSE ஆரம்பம்

காலம் : ஒரு மாதம்

Course உள்ளடக்கம்

1. Facials ( 5 வகை) : Herbal, Aroma, Fruits Gold (Galvanic), Pearl (High Frequency)
2. Hair Styles - 15 வகை
3. Hair Cutting- 4 வகை
4. Bridle dressing - Hindu, Cristian
5. Make up - Simple, Bridle, Oil, Dance
6. Scalp Merssage under Eye Treatment
7. Eye brow Shapping & Threatin
8. Mani Care, Pedi Care
9. Mehenthi - Areabian Cultureral

பயில விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

★ யாழ்ப்பாணத்தில் இல. 94, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியில் வரும் சனி, ஞாயிறு மட்டும்.
காலை 10-12 மணி வரை பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.
★ வடமராட்சி - தென்மராட்சிப் பகுதிகளிலும் பயிற்சிகள் இடம்பெறும்.
மேலதிக விவரங்களுக்கு : திருமதி B. அகிலா (அழகுக் கலை பயிற்றுநர்).
0777 570138

(37009)(26-19-44)


## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 - 01 - 1925



மறைவு 26 - 09 - 1995

### அமரர் இராமலிங்கம் இரத்தினசிங்கம்

எம் உயிரில் கலந்து - நித்தம் எம்
உணர்வில் நிறைந்து வாழும் தந்தையே
ஒன்பது ஆண்டுகள் என்ன
எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும்
என்றும் நீங்கள் எமக்கு அழியா ஓவியமே!

"கூல்ட் கவுஸ்",
டச் வீதி,
உடுவில்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(C/38210)(42-19-44-26)

## ஆளுக்கொரு மரம்நாட்டி
## சுற்றுச்சூழலைப் பாதுகாக்க முன்வாரீர்
# தேசிய மரநடுகை தினம்
## Oct. 15.2004
# அழைப்பு

UNDP நிதியுதவியுடன் பொருண்மிய மதியுரையகம் (TECH) இணைந்து நடைமுறைப்படுத்தும் மரநடுகைத் திட்ட அங்குரார்ப்பணம் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காலம்: இன்று 15.10.2004 யாழ்ப்பாணத்தில்

இடமும் நேரமும்: விவசாய பீடம், யாழ். பல்கலைக்கழகம் - மு.ப. 10.00 மணி
கிளிநொச்சியில் -
கலை பண்பாட்டு மண்டபம் - மு.ப. 10.00 மணி
முல்லைத்தீவில் -
ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் - மு.ப. 11.00 மணி
மன்னாரில் -
அடம்பன் றோ.க.த. பாடசாலை - மு.ப. 11.30 மணி

உங்கள் குழந்தைகளின் எதிர்கால வாழ்வு நன்றாக அமைய, நல்ல சுற்றுச் சூழலினை அவர்களுக்கென அமைத்துக்கொடுக்க வேண்டியது உங்கள் கடமை அல்லவா?

ஐக்கியநாடுகள் அபிவிருத்தித்திட்டம் (UNDP) கிளிநொச்சி. - பொருண்மிய மதியுரையகம் (TECH) இரணைமடுச் சந்தி, கிளிநொச்சி.

(37613) (24-19-44-26)


## IELTS

(Reading, Listening, Writing, Speech)
New Batch Starts 20th Oct 04
5.00p.m. – 7.00p.m.
or
6.00p.m. – 8.00p.m.
(Wed. & Thu.)
10.00a.m. – 1.30p.m. &
9.30a.m. – 11.00a.m.
(Thu. & Fri.)
100% coaching for the exam.

## Spoken English

New Batch Starts 21st Oct 04
8.30a.m. –10.00a.m.
(Thu. & Fri.)
Conducted by British qualified lecturer

UniVentures Institute,
55, Martyn Rd., Jaffna.
0777 918280

(C/38217)



abe



Diploma In Business Information Systems (PT/FT)

Subjects:

1. Computer Fundamentals
2. Computer Applications in Business & Finance
3. Business Communication
4. Organisational Behaviour (Optional)
5. Accounting (Optional)

Fastest route to a degree in computing or Management.

Continue your Studies in 72 Universities in 13 countries including U.K., U.S.A., CANADA, AUSTRALIA

New Batch starts on 06th November 04

UNIVENTURES INSTITUTE OF BUSINESS Management,
55, Martyn Road, Jaffna
0777 918280.

(C/38216)


## விளையாட்டு நிகழ்வுகள்

புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாவீரர்கள் ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4மணி முதல் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

☆ மாலை 4மணி - சென்.அன்ரனீஸ் வி.க. எதிர் கலைமகள் வி.க.

☆ மாலை 5மணி - அரியாலை ஐக்கிய வி.க. எதிர் றேஞ்சர்ஸ் வி.க. (10-5)

☆ ☆ ☆

அஸ்ரா வெற்றிக் கிண்ணத்துக்காக 14 வயதுக்குட்பட்டோருக்கிடையில் நடத்தப்படும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதியாட்டம் இன்று காலை 10 மணி முதல யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் மொனறா கலை நிஷங்க மத் திய மகாவித்தியாலயமும் யாழ்.மத்திய கல்லூரியும் மோதவுள்ளன.

இதேவேளை - கொழும்பில் நடைபெறும் மற்றொரு அரையிறுதியாட்டத்தில் தலங்காவில எம்.டி. எச். ஜெயவர்த்தன மகாவித்தியாலயமும், முல்லை மத்திய மகா வித்தியாலயமும் மோதவுள்ளன.

இவற்றில் வெற்றி பெறும் அணிகள் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் இடம்பெறும் இறுதியாட்டத்தில் பங்குபற்றவுள்ளன. (10-5)

## விண்ணப்பம் கோரல்

2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலைப் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்பாக தமக்கு அனுப்பி வைக்குமாறு பரீட்சை ஆணையாளர் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். (10-152)


## புதிய பிரிவுகள் ஆரம்பம்

எமது நிறுவனத்தில் கீழ்வரும் கற்கைநெறிகளிற்கான விண்ணப்பங்கள் மாணவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.



Dip in MS Office
Dip in Desktop Publishing
Internet @ email
Quick Book 2000 Pro
(உயர்கல்வி மாணவர்களுக்கானது)

மேலதிக விபரங்களிற்கு:

STP
73, Palaly Road, Kantharmadam. Jaffna.
Branch:Sankaththanai,Chavakachcheri T.P:2222674



## LONDON LANGUAGE SCHOOL

The School with golden touch

**Communication English**
(புதிய பிரிவுகள் ஆரம்பம்)
5 Months
Enrolment fee 2,500/=

**Presentation & Interview Skills**
(புதிய பிரிவுகள் ஆரம்பம்)
1 Month (16 hrs) 16.10.2004 - 3.30 p.m.
Enrolment fee 1,250/=

**TOEFL/IELTS**
(4 தனித் தேர்ச்சிபெற்ற விரிவுரையாளர்கள் செய்முறை விளக்கப் பாடவிதானத்துடன்)
ஆரம்பம் 16.10.2004
Course Fee 6000/=
Duration - 3 Months

**French** வகுப்புகள்
Enrolment 2500/=
Duration 6 Months

**Secretarial Science (With Specialised lectures by foreign Staff)**
★ Admin. Asst. ★ Personal Asst.
★ Receptionist ★ Marketing Representatives

**FREE**
SEMINAR
on Saturday (16-10-2004)
Time: 9.00 a.m. 11.00 a.m., 2.00 p.m.
பங்குபற்றும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.
3 Months Enrolment fee 2500/=

தொடர்புகளுக்கு: 077-6176383, 0777 238605, 0777-222300, 077-6589372
774, Hospital Road, Jaffna.
Director,
LONDON LANGUAGE SCHOOL, JAFFNA.

(37618) (34-19-26-44)


## நின் நினைவில் கரைந்த ஈரேழு ஆண்டுகள்

மலர்வு 1972 - 07 - 23



உதிர்வு 1990 - 09 - 20

### செல்வி யோகதர்சினி சிவசுப்பிரமணியம்

வான்மதியும் விண்மீனும் நம் பக்கம் வாரா
அவை வழங்குகின்ற ஒளிவெள்ளம் - நம்மைச் சேரும்
ஊனுருகுந்த உயிர் நீத்து - நீ சென்றாலும்
உன் பூ முகத்தின் பேரொளியே எம் உள்ளத்தில்
நின்று நித்தம் நிழலாடி நீ நம்மோடு
நித்திலமாய் அத்தன் அவன் அருள்பாலிக்க
அன்பொழுக அமுத மொழிக் கிள்ளையாக
என்றும் நீ எம் நினைவில் வாழ்வாயம்மா!

51, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

நின் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா,
தங்கை, உறவினர்கள்.

(C/38208)(42-26-19-44)

# சிறுவர், முதியோர் தினவிழா

மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனை ஏற்பாடு செய்துள்ள சிறுவர், முதியோர் தின விழா இன்று முற்பகல் 11 மணிமுதல் உடுத்துறை மகா வித்தியாலயத்தில் உதவி அரச அதிபர் ஆர். ரி.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.


## வெளிநாடுகளுக்கு பொருள்களை அனுப்ப துரித சேவை

LONDON, SWISS, FRANCE, GERMANY உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் உள்ள உங்கள் அன்பு உறவுகளுக்கு உணவுப் பொருள்கள், உடுப்பு வகைகள், அன்றாட பாவனைப் பொருள்கள் என்பவற்றை உடனடியாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய விதமாக விமான மூலமும், கப்பல் மூலமும் அனுப்பிவைக்க முடியும்.

தொடர்புகளுக்கு:

M.நிஷாந்தன் 0777 - 323192

E.Y.பற்றிக் 0777 - 113073

**இஷா ரெக்**

பஸ் நிலையம் முன்பாக

நெல்லியடி.

(சி-38219)(29-13-15)


## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 - 06 - 1940



மறைவு 03 - 10 - 1997

### அமரர் திருநாவுக்கரசு தருமலிங்கம்

திதி: 15.10.2004

எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் நெஞ்சம் உங்களை மறந்திடுமோ!
நித்தமும் உங்களை எண்ணி
சித்தம் கலங்கி நிற்கின்றோம்...
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

*178/1 கொழும்புத்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (37623)(33-13-15-29)

நாளும் துயருறும்:
குடும்பத்தினர்.

## 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் அருணாசலம் கந்தசாமி

திதி: 15.10.2004

*(முன்னாள் பிறப்பு இறப்பு விவாகப் பதிவாளர். வலி. வடக்கு. உடுவில். முன்னாள் அதிபர்.)*

ஊருக்கோர் உத்தமராய், அன்புக்கோர் இலக்கணமாய் வாழ்ந்து சிறந்து எம்மை வாழவைத்த தெய்வமே உங்கள் அன்பு மனைவி, மகள், மைந்தன், மருமக்களோடு எம் முகத்தைப் பாராது ஏன் போனார் அப்பப்பா என்றேங்கும் உங்கள் அருமைப் பேரர்களும் அஞ்சலித்து நிற்கின்றோம் உங்கள் ஆத்மாவின் சாந்திக்காய்.

*உடுவில் மேற்கு,*
*சுன்னாகம்.* (37621)(33-13-15-29)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### முத்தையா செல்வராஜா

(முன்னாள் கூட்டுறவுப் பரிசோதகர்)



இலக்கம் 05. பழம் வீதி, கந்தர்மடத்தைச் சேர்ந்த முத்தையா செல்வராஜா நேற்று (14.10.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் கோமளேஸ்வரியின் (ரோஸ்) அன்புக் கணவரும் சிறீதரன், சிறீரஞ்சினி, சிறீசபாறஞ்சன், காலஞ்சென்ற சிறீமுகுந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.சிறீதரன் (மகன்).

*இல.05, பழம் வீதி,*
*கந்தர்மடம்.* தொலைபேசி இல. 077 6271331 (37633)(29-13-15)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### செல்வன் பெனில்டஸ் விதுரஷணன்

அன்னை மடியில் 27.01.1999 — ஆண்டவன் அடியில் 15.09.2004

காலமெல்லாம் கண்ணீரில் – எமை
கற்பூரமாய் கரைய விட்டு
காத்திருக்க மனமின்றி
காற்றிலே கலந்ததேனோ
கண்[illegible]க்குள் வைத்துக்
காத்த[illegible]ம் கண்மணியே
கண்வளராய்...

**02.09.2004** அன்று விபத்தில் தலையில் படுகாயமடைந்த எங்கள் அன்பு மகனுக்கு சிகிச்சையளித்த யாழ்.போதனா வைத்தியசாலை, கொழும்பு தனியார் மருத்துவமனை வைத்தியர்கள், தாதியருக்கும் 15.09.2004 அன்று எமது செல்லமகன் எம்மைவிட்டுப் பிரிந்தபோது அவருக்கு இறுதியஞ்சலி செலுத்தியோருக்கும் மலர்வளையம் வைத்தும் பத்திரிகைகளில் கண்ணீர் அஞ்சலி செலுத்தியும், அஞ்சலிப் பிரசுரங்கள் விநியோகித்தும் தொலைபேசி மூலமும் தந்தி மூலமும் அனுதாபத்தினை தெரிவித்த அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இன்று காலை 6.30 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் இடம்பெறும் இரங்கற் திருப்பலியிலும் பின்பு நண்பகல் எமது வீட்டில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய உணவிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கலைமணி லேன், கட்டப்பிராய். (37631)(29-13-15)

தந்தை,தாய், சகோதரன் மற்றும் உறவினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி மீனாட்சிப்பிள்ளை கனகசபை

அல்லாரை தெற்கைச் சேர்ந்த கனகசபை மீனாட்சிப்பிள்ளை நேற்று (14.10.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபையின் அன்பு மனைவியும் மகேஸ்வரி (பிரான்ஸ்), அமிர்தநாயகி, சிவகுமாரன், நடேசகுமாரி, வசந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும் கணேசலிங்கம் (பிரான்ஸ்), சாந்தகுமார் (கொழும்பு), ஈஸ்வரி, அருளானந்தம் ஆகியோரின் மாமியாரும் திலக்சன், தினோசா (பிரான்ஸ்), சஞ்சீவன், சானுகா, வின்சன், சகிலன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2004) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொற்புலவு மயானத்தில் பிற்பகல் 2.30 மணியளவில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.சிவகுமாரன் (மகன்).

*அல்லாரை தெற்கு,*
*அல்லாரை.* (37630)(29-13-15)


**ராஜா** யாழ்ப்பாணம்

விஜயகாந். பிரபுதேவா **எங்கள் அண்ணா**

இன்று பு.நே: 10.30, 2.30. மட்டும் (ரீகல்)

M.G.R., ஜெயலலிதா நடித்த **ஆயிரத்தில் ஒருவன்**

இன்று மட்டும் 6.30, 9.30 இற்கு

16 முதல் G/7 றெயின்போ காலனி (சி-38041)

**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக ஸ்ரீகாந், ஸ்னேகா மற்றும் பலர் நடிப்பில்



**போஸ்** காட்சி நேரம்: 11.00. 3.00. 7.00. 10.00 (பு.நே) (C-37410)

**நிரஞ்சனாஸ்** சங்கானை

விஜய். சோனியா. அகர்வால். வடிவேல் மற்றும் பலர் நடித்த

**மதுர**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (புதியநேரம்)

**சிந்தி சினிமா** பண்டத்தரிப்பு

விஜய். ஜோதிகா. கிரண் நடிப்பில்

**திருமலை**

காட்சிகள் தினசரி 3.00, 7.00 (பு.நே) சனி, ஞாயிறு 11.00, 3.00, 7.00 (பு.நே)




# மரண அறிவித்தல்கள்

## இரத்தினசபாபதி ஜெயக்குமாரன்

(ஓய்வுபெற்ற முகாமையாளர், சாவகச்சேரி ப.நோ.கூ.ச.கிளை)



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் அல்லாரை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசபாபதி ஜெயக்குமாரன் 13.10.2004 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி - கனகம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் மற்றும் சிவக்கொழுந்து (அதிபர், அல்லாரை அ.த.க.பாடசாலை, M.Ed. 3 ஆம் வருடம்) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அருணாசலம் -செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் மற்றும் மினேஸ் (மாணவன், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), மதிமுகன் (மாணவன், யா/மீசாலை வீரசிங்கம் ம.வி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஜெயரூபி, சாந்தரூபி, இராஜரூபி, செந்தில்குமார் (கனடா), செல்வக்குமார், காலஞ்சென்ற இரத்தினகுமார் ஆகியோரின் சகோதரனும் பாஸ்கரன் (T.O வவுனியா), ஸ்ரீஸ்கந்தராசா (லண்டன்), பிறேமானந்தன் (ஜேர்மனி), முத்தாம்பிகை (கனடா), தருணி (N.S.B, சாவகச்சேரி), காலஞ்சென்றவர்களான முத்துலிங்கசாமி, சிவமலர் ஆகியோரின் மைத்துனரும் இராமலிங்கத்தின் சகலனும் மகிழ்ந்தினி, மதனரூபன், பிரவீனா, பிரியந்தி, பிரதீபா, ரஜீவ், ராஜாஜி, ராகுல் ஆகியோரின் மாமனாரும் திவ்வியன, ஸ்நீகா, ஆரணி, பவிராம் ஆகியோரின் பெரிய தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14.10.2004) வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*அல்லாரை வடக்கு,*
*மீசாலை.* (37626)(29-13-15)

தகவல்:
குடும்பத்தினர்.

## சேனாதிராசா பூபாலசிங்கம்

(ஆத்தாள்)



சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த சேனாதிராசா பூபாலசிங்கம் நேற்று (14.10.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேனாதிராசா - நகுலேஸ்வரி தம்பதிகளின் மகனும் தில்லைநடராசா, விக்னேஸ்வரி, தர்மகுலசிங்கம், ஜெயபாலன், கிருஷ்ணபாலன், தங்கராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2004) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 4 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதுமலை வடக்கு,*
*அம்மன் கோயிலடி,*
*மானிப்பாய்.* (37628)(29-13-15)

தகவல்:
சி.சண்முகலிங்கம்.

## ஐயாத்துரை சிவப்பிரகாசம்

*{இளைப்பாறிய கணக்குப் பரிசோதகர், இலங்கை அரச மருத்துவமனை* (Hospital Auditor)}



கரணவாய் தெற்கு, மூத்த விநாயகர் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஐயாத்துரை சிவப்பிரகாசம் 09.10.2004 சனிக்கிழமை London இல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை -சின்னத்தங்கம் தம்பதிகளின் அருமை மருமகனும் இராசம்மாவின் பாசமிகு கணவரும் தமயந்தி, தவநேசன், தவராணி, தவமலர், தவக்குமார், தவநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆனந்தகுமார், நிறைஞ்சலா, பிறேமதாஸ், ரவிதாஸ், பிரதீபா, சங்கீதா ஆகியோரின் மாமனாரும் ராசிகா, நிவேஷ், சுபாஷ், நிவர்ஜினி, சுகன்ஜா, சிந்தியா, அனுஜன், இந்துமதி, வான்மதி ஆகியோரின் அன்புத் தாத்தாவும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், பரமலிங்கம், சிந்தாமணி, அழகம்மா, நடராஜா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், மாணிக்கம் ஆகியோரின் மைத்துனரும் வேலும்மயிலும் செல்வராணியின் சிறிய தகப்பனாரும் தனராஜசேகரின் அன்பு ஐயாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (17.10.2004) ஞாயிற்றுக்கிழமை அன்று London இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

T.P. :00442087659003.

தகவல்:
M.ரவிதாஸ் (மருமகன்).

(37625)(29-13-15)

## பொன்னையா சோதிப்பிள்ளை

(ரொரன்ரோ - கனடா)

கோண்டாவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது ரொரன்ரோ - கனடாவில் வசித்துவந்தவருமாகிய பொன்னையா சோதிப்பிள்ளை 12.10.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும் இராசரத்தினம் (கொக்குவில்), செல்வரத்தினம் (ரொரன்ரோ), கனகரட்ணம் (ஜேர்மனி), காலஞ்சென்ற பரமேஸ்வரி (சங்கானை), மகேஸ்வரி (மொன்றியல்), ராணி (மொன்றியல்), தேவி (ரொரன்ரோ), இந்திரா (ரொரன்ரோ) ஆகியோரின் அன்புத் தாயாரும் சகுந்தலாதேவி (கொக்குவில்), சாரதாதேவி (ரொரன்ரோ), பரமேஸ்வரி (ஜேர்மனி), காலஞ்சென்ற செல்வம் (சங்கானை), காலஞ்சென்ற பொன்னம்பலம் (மல்லாகம்), காலஞ்சென்ற காராளபிள்ளை (கொக்குவில்), இராசலிங்கம் (ரொரன்ரோ), பத்மநாதன் (ரொரன்ரோ) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.10.2004) சனிக்கிழமை ரொரன்ரோ, கனடாவில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
பொ.இராசரத்தினம்,
பொ.செல்வரத்தினம் (கனடா).
T.P.No: 416-2851775

*குளப்பிட்டி சந்தி,*
*கொக்குவில்.* (37622)(29-13-15)

# நான்கு மாவட்டங்களில் இன்று
# மரநடுகைத் திட்டம் அங்குரார்ப்பணம்

தேசிய மரநடுகை தினத்தையொட்டி ஐ.நா. அபிவிருத்தித்திட்ட நிதியுதவியுடன் பொருண்மிய மதியுரையகம் நடைமுறைப்படுத்தும் மரநடுகைத் திட்டம் இன்று யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய நான்கு மாவட்டங்களில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக விவசாயபீடத்திலும் கிளிநொச்சியில் உள்ள கலை பண்பாட்டு மண்டபத்திலும்

முற்பகல் 11 மணிக்கு முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்திலும் 11.30 மணிக்கு மன்னார் அடம்பன் றோ.க.த.பாடசாலையிலும் இந்த அங்குரார்ப்பண நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் நோக்குடன் இந்த மரநடுகைத் திட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது. (10)

## மேலும் ஒரு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களை அடையாளம் காட்டுவதற்கான அணிவகுப்பு நேற்று நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் இடம்பெற்றது.

இந்த அடையாள அணிவகுப்பில் சாட்சிகளான மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி ருவான் சந்திரசேகர, விசாரணை அதிகாரி பெறோஸ் ஆகியோரும் இவர்கள் சார்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நலன்பேணும் சட்டத்தரணி றெமீடியஸும் -

பொலீஸ் உத்தியோகத்தர்கள் சார்பாக சட்டத்தரணிகளான வி.ரி.சிவலிங்கம், கா.தவபாலன், எஸ்.ஏ.இ.ஏகநாதன் ஆகியோரும் -

கொழும்பு பொலீஸ் தலைமையக விசேட புலனாய்வுப் பிரிவு உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் பத்மசிறி முனசிங்காவும் - மன்றில் ஆஜராகியிருந்தனர். நேற்றைய அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்பட்ட இருவரில் பொலீஸ் சார்ஜனடான அசைல, சாட்சிகளால் அடையாளம் காட்டப்பட்டார். இதனை அடுத்து, அடையாளம் காட்டப்பட்டவரை பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி தரத்திலான அதிகாரி ஒருவருடைய 15 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்லுமாறும்

சம்பந்தப்பட்ட நபர் நீதிமன்ற அனுமதியின்றி வெளியில் செல்லமுடியாது என்றும் நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை - நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் சாட்சிகளால் அடையாளம் காட்டப்பட்ட முதலாவது சந்தேக நபரான பாலத் செனரத்தின என்பவர் இச்சம்பவத்துடன் தொடர்புடையவராவார். அவர் நீதிமன்றத்தை ஏமாற்றி கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் பணியாற்றுவதாகக் கூறி தப்பிச் சென்றுள்ளார். இதற்கு நீதிமன்றம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சாட்சிகள் சார்பாக ஆஜரான சட்டத்தரணி நீதிவானிடம் விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிவான், யாழ்ப்பாணம், கொடிகாமம் ஆகிய பொலீஸ் நிலையங்களில் கடந்த 27ஆம் திகதி காலை 6 மணி முதல் மறுநாள் காலை 6 மணிவரை இருந்த சகல பொலீஸ் உத்தியோகத்தர்களின் விவரங்களை எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்பாக மன்றிற்குச் சமர்ப்பிக்குமாறு மேற்படி இரு பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் நீதிவான் உத்தரவிட்டதுடன் -

அடையாளம் காட்டப்பட்ட சந்தேக நபர்களுக்கு எதிராகச் சட்டமா அதிபரின் ஆலோசனைகளைப் பெற்று வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பு பொலீஸ் தலைமையக விசேட புலனாய்வுப் பிரிவு உதவிப் பொலீஸ் அத்தியட்சகருக்கு உத்தரவிட்டார். (எ-5)


COMPUTER SALES, SERVICE MAINTENANCE, & REPAIRS




Global Informatics (Pte) Ltd.
#379, Kasthuriyar Road. Jaffna.
Tel : 077 736 4247, 077 748 9361. e-mail : gijaf@dialogsl.net

அழையுங்கள் உங்களின் இடங்களுக்கே எமது தொழில்நுட்பவியளாளர்களை. முன் பதிவு செய்யும் வாடிக்கையாளருக்கு விசேட கட்டணம்.

HO : #401-2/1, Galle Road, Colombo-04. Tel: 077 736 4246-7, 011 551 0805. Fax: 011 551 7626. e-mail : gi@dialogsl.net http://www.globalinformatics.net


## இராணுவத் தளபதி வடக்குக்கு விஜயம்

வவுனியா,ஒக்.15

இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட விஜயம் ஒன்றினை மேற்கொண்டு நேற்று வவுனியா வந்தடைந்தார்.

வன்னி தலைமையகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் வன்னி இராணுவத தளபதி பாரமி குலதுங்க தலைமையிலான குழுவினர் கலந்துகொண்டனர்.

வன்னியின் தற்போதைய நிலைப்பாடு தொடர்பாகவும் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாகவும் இதில் விரிவாக ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவுக்கான விஜயத்தை முடித்துக்கொண்டு அவர் மன்னாருக்குச் சென்றார் என்று கூறப்பட்டது. (எ-164)

## நிவாரணம்

நவாலி,ஒக்.15

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் இடம்பெயர்ந்தவர்களுக்கான இலவச நிவாரணம் இலக்கம் 26 ஏ,பி புள்ளிகளுக்கு தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. (10-100)

## சூன்சக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாய்ந்தது. அது இப்போது அவருக்குத் தொல்லை கொடுக்கத் தொடங்கியுள்ளது. தோள்பட்டையில சற்று நோவு. அதனால், அவர் வீட்டில் தங்கியிருந்து ஓய்வெடுக்கிறார். அவ்வளவுதான். அதை வேறுவிதமாகச் சித்திரித்து தென்னிலங்கை ஊடகங்கள் கதைகட்டி விடுகின்றன. இதனை ஊடகங்களுக்குத் தெரிவிக்கும்படி அவரே என்னிடம் கோரினார். அதையே உங்களுக்குக் கூறுகிறேன் என்றார் மதியுரைஞர் பாலசிங்கம். (எ-க)


D.C.A
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.
யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் B.A. Final.
அரசறிவியல் - பொன்சந்நுரு
புவியியல் - கிரிதரன்
மெய்யியல் - மோகன்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
16.10.2004 சனி காலை 11மணி
தனிப்பாட அனுமதி உண்டு.
விவரங்களுக்கு:
D.C.A.
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.
(37522)

BOND INSTITUTE
JAFFNA
A/L
PHYSICS
*PAPER CLASS
*REVISION CLASS
*THEORY CLASS
2005 BATCH
PROP
2006 BATCH
HEAT
BY:P.T.MOHANRAJH
B.Sc.
START:
18.10.2004
MONDAY 10 a.m.
(37596)


## 10 புலிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாலத்தில் ஆயுதங்களுடன் காணப்பட்டார்கள் என்று கூறப்பட்டுக் கைதுசெய்யப்பட்டவர்களான விநாயகமூர்த்தி சியாமளா (சுடர்விழி), நவரத்தினம் மஞ்சுளா (திலகவாணி), நவரத்தினம் புனிதமலர் (தேர்கோதை), சிவஞானம் திருமஞ்சு (தமிழிசை), தியாகராயா முரளீதரன் (கங்காலன்), கோபாலசிங்கம் தயானந்தம் (நந்தன்), சிறீதரன் சுதாகரன் (கண்ணன்), கதிரேசபிள்ளை றஜீவகுமார் (நதீஸன்) ஆகியோருமே நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த பத்துப் பேரையும் தலா 5 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதித்திருந்தது.

வாழைச்சேனைப் பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்ட இரு புலி உறுப்பினர்களையும் மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் வாழைச்சேனை பொலீஸ் நிலையத்திலும் கல்லடிப் பாலத்தில் கைதுசெய்யப்பட்ட எட்டுப் பேரையும் மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் காத்தான்குடி பொலீஸ் நிலையத்திலும் கையெழுத்திடுமாறு நீதிமன்றம் பணித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவுப்படி மட்டக்களப்பு நீதிவான்மன்று நேற்றுப் போராளிகளுக்குப் பிணை வழங்கியது.

பிணை வழங்கப்பட்ட பத்துப் போராளிகளும் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளினால் நீதிமன்றத்தில் வைத்துப் பொறுப்பேற்கப்பட்டனர்.

கண்காணிப்புக்குழுவால் அழைத்துச்செல்லப்பட்ட அவர்கள், செங்கலடி - பதுளை வீதியிலுள்ள கொடுவாமடுபால புலிகளின் முன்னணிக் காவலரண் பிரதேசத்தில் வைத்து விடுதலைப் புலிகளின் பிராந்தியப் பொறுப்பாளர்களிடம் கையளிக்கப்பட்டனர். (எ-க-7-ரி)

## பாலசிங்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரை ஒஸ்லோவில் சந்தித்துக் கலந்துரையாடிவிட்டு எரிக் சொல்ஹெய்ம் லண்டன் புறப்படுவார். திங்கட்கிழமை பிற்பகலில் அவர் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தை அவரது லண்டன் இல்லத்தில் சந்திப்பார்.

அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் இலங்கை விவகாரம் தொடர்பாகத் தாம் நடத்திய பேச்சுக்களின் பெறுபேறுகளையும் -

இந்தியாவில் ஹெல்கிஸன் இலங்கை விவகாரம் தொடர்பாக நடத்திய பேச்சுக்களின் விவரங்களையும் -

லண்டனில் திங்களன்று பாலசிங்கத்தைச் சந்திக்கும்போது எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

லண்டனில் பாலசிங்கத்தைச் சந்தித்த பின்னர் சொல்ஹெய்ம் ஒஸ்லோ திரும்புவார்.

அதற்கு இரண்டாவது நாள் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் அரசியல் விவகாரக்குழு நோர்வே போய்ச்சேர்கின்றது. அக்குழுவினரை ஒஸ்லோவில் எரிக் சொல்ஹெய்ம் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-க)


தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை-2005
மாதிரி வினாத்தாள்கள்
திரு. வே. அன்பழகன் ஆசிரியர் அவர்களின் மாதிரி வினாத்தாள்களைப் பெறவிரும்பும் பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், தனிப்பட்டோர் உங்கள் விண்ணப்பங்களைப் பெற்றுப் பதிவுகளை முனகூட்டியே செய்துகொள்ளுங்கள்.
முதலாவது மாதிரிப் பரீட்சை
– 17.10.2004 ஞாயிற்றுக்கிழமை.
(ச-38220)
பதிவுகளுக்குத் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி

| யாழில் | தென்மராட்சியில் |
| --- | --- |
| தயா அச்சகம் | வளர்மதி கல்வி நிலையம் |
| நாவலர் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். | பொலீஸ் நிலையம் அருகில் கண்டி வீதி, சாவகச்சேரி. |

மேலதிக தொடர்புகளுக்கு: 077 3068999

குறை விளக்கம் பெறுபவர்கள் நிறை விளக்கம் பெற்றிட
கணக்கீடு: திரு. பாலவாசன் B.B.A. (F.M.Spl.)

| A/L 2006 | A/L 2005 |
| --- | --- |
| கட்டுப்பாட்டுக் கணக்கு<br>பிரிவு I :- Sat.,Sun. 9-10<br>பிரிவு II:- Sat.Sun. 12-1 | வருமானச் செலவுக் கணக்கு<br>Sat.Sun. ⇒8-9 |

(ச-38188) ஆரம்பம்: 16.10.04 Sat.
விக்னா கல்வி நிறுவனம்

COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.[off Stanly Rd.]
0777 222422, 0777917781
யாழ் நகரில் முதன் முறையாக புதிய வடிவமைப்பில்
Diploma in Auto CAD
காலம்:-3மாதம் 5000/= →1000/= 80% OFF
வகுப்புக்கள் ஆரம்பம்
16-10-2004 Sat:- 5.00pm
18-10-2004 Mon:- 3.00pm




ON LINE CLASSES
Diploma in MS Office
Diploma in AUTOCAD
காலம்:- 3 மாதம்
ஆரம்பம்:-16.10.2004
மேலதிக விபரங்களுக்கு:-
SCC
No. 43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna.
T.P No. 0212225170, 0777846811

வடமராட்சி மாணவர்களிற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்......
அமெரிக்காவின் Sun Microsystems, இந்தியாவின் TATA Infotech ஆகிய உலகத்தரம்வாய்ந்த கணனி நிறுவனங்களின் சான்றிதழ் பெற்ற,
பேராதனை, மொறட்டுவ பல்கலைக்கழகங்களில் பட்டம்பெற்ற பொறியியலாளர்களினால்
கணனி விளையாட்டுக்களை விளையாடி மகிழும் Computer Game Zone ஐ வடமராட்சியில் அறிமுகப்படுத்திய ஜெயந்தா கணனிப்பூங்காவில்
இம்மாதம் 23ம் திகதி சனிக்கிழமை முதல் புதிய கணனி வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
சிறுவர்களிற்கு Certificate for Kids in Computing
வளர்ந்தோரிற்கு Diploma in Office Automation மற்றும் Diploma in Hardware Engineering
ஜெயந்தா கணனிப்பூங்கா Jeyantha Computer Park
75/22 தும்பளை வீதி, சிவன் கோவிலடி,பருத்தித்துறை. 75/22 Thumpalai Road, Sivankovilady,Point Pedro.
தொலைபேசி : 077 7482339 Phone : 077 7482339

Computer Classes
Computer Assisted Learning(CAL)
Self Practicals
Computer Games
Type Setting
Printing
Scanning
Photo Editing
CD Writing
Computer Repairing and Maintenance
Computer & Peripheral Sales





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.10.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.